# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஏப்ரல் - 2023

தனிப்பிரதி ரூ.20



## 08.04.2023 அன்று தலைமைச் செயலகத்தில் ஜாக்டோ- ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களுடன் அமைச்சர்கள் நடத்திய பேச்சுவார்த்தை











## அமைச்சர்கள் & சட்டமன்ற உறுப்பினர்களிடம் ஜாக்டோ – ஜியோ கோரிக்கை மனு அளித்த நிகழ்வு

















# மகளிர் தின கருத்தரங்கம்



கடலூர்



திருச்சி



தருமபுரி



நாமக்கல்



மதுரை



இராமநாதபுரம்



கோவை



கள்ளக்குறிச்சி



திருப்பூர்



வேலூர்

# அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2023 ஏப்ரல்**

**மலர்:44 இதழ்:04**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:

**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

வரைகலை: கார்ட்டுன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி



**முகவரி:**

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



**அச்சகம்:**

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **நல்ல செய்தி வரும் என்ற நம்பிக்கையில் கோட்டையை முற்றுகையினை கொஞ்சம் நிறுத்தி வைப்போம்!**
   *தலைவர் மடல் ..................................4*
2. **முதல்வரின் அறிப்புக்காக முற்றுகைப் போராட்டம் தற்காலிகமாக தள்ளி வைப்பு! தேர்தல் வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கை இருக்கு!**
   பொதுச் செயலாளர் மேசையிலிருந்து...................................8
3. **மத்தியத்தர வர்க்க மனோபாவம்!**...............*14*
4. **புதியகல்விக் கொள்கை புகுத்தும் அபாயங்கள்** .......................................*17*
5. **அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களும் அரசு பள்ளி மாணவர்களே!**.....................*20*
6. **அகில இந்திய விவசாயிகள் - விவசாய தொழிலாளர்கள் - சிஐடியு மக்களை அணி திரட்டி நடத்தும் தில்லி பேணி!**...............*22*
7. **அவுட் சோர்சிங்கிற்கு ஆதரவு கேட்கும் நிதியமைச்சர்** ......................................*24*
8. **போர்க்களம் கண்ட அரசு ஊழியர் போராட்டம், ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்!** ..........................................*26*
9. **நாங்கள் தலைகீழாகத்தான் குதிப்போம்!** ....*29*
10. **கோடுகள்**..........................................*31*

தலைவர் மடல்

# நல்ல செய்தி வரும் என்ற நம்பிக்கையில் கோட்டையை முற்றுகையினை கொஞ்சம் நிறுத்தி வைப்போம்!

நமது இடைவிடாத போராட்டங்கள் இருபதாம் ஆண்டை எட்டியுள்ளது. 2003ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதலாவதாக தமிழகத்தில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்த செல்வி ஜெயலலிதா முதற்கொண்டு அதன்பிறகு ஆட்சியமைத்த கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் அவரது ஆட்சியைத் தொடர்ந்த எடப்பாடி பழனிச்சாமி, சென்ற தேர்தலில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நம்பிக்கைகுரிய தோழனாக தோள்நின்று உங்களுக்கானதை நான் ஆட்சிக்கு வந்ததும் உடனே செய்வேன் என்ற வாக்குறுதியை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மேடைகளிலும், ஜாக்டோ ஜியோ மாநாடுகளிலும் ஏறி நின்று உரத்துக் கூறிய இன்றைய முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் ஆகியோர் வரை எல்லோரும் 2006 சட்டமன்றத்தேர்தல் முதற்கொண்டு 2021 தேர்தல் வரை நயவஞ்சக நாடகம் நடத்தி வருகிறார்கள். 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசு ஊழியர்களுக்கான அனைத்து உரிமைகளையும் மீளப்பெற நடவடிக்கை எடுப்போம்.' என்ற நயவஞ்சகம் இன்றும் தொடர்கிறது. இந்த விஷயத்தை 'அரசு ஊழியர் -எதிர்- ஆட்சியாளர்கள்' என்பதிலிருந்து 'அரசு ஊழியர் -எதிர்- அரசியல்வாதிகள்' என்று பார்க்க வேண்டிய அனுபவத்தை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

கடந்த 20 ஆண்டுகள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் போன்றோருக்கு மிகவும் இக்கட்டான சூழலை ஏற்படுத்தியுள்ள காலமாக அமைந்திருப்பதை அரசு அதிகாரிகள் மட்டுமல்ல, அதிகாரத்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல ஆட்சியாளர்களும் கூட அறிந்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களின் ஊதியங்களை நிர்ணயம் செய்வதில் மிகப்பெரிய முரண்பாடுகள் ஏற்பட்டு அவற்றை களைவதற்கான முயற்சிகளை மனுக்கள், கோரிக்கைகள், பிரதிநிதித்துவங்கள், கவனஈர்ப்பு ஆர்ப்பார்ட்டங்கள், கண்டனத் தீர்மானங்கள், உண்ணாநிலைப் போராட்டங்கள், முற்றுகைப் போராட்டங்கள் என அனைத்துவிதமான போராட்டங்களை கடந்த 20 ஆண்டுகளாக அரசு ஊழியர்கள் ஆகிய நாமும் ஆசிரியர்களும் தொடர்ந்து நடத்தி வருகிறோம். ஆனால் நமது கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு நேரடிப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்க முன்வராமல் ஐஏஎஸ் அதிகாரிகள் தலைமையில் குழுக்கள் அமைத்து அவர்கள் மூலம் நமது பிரதிநிதித்துவங்களைப் பெற்று அவற்றை பரிசீலிப்பதுபோன்ற பாவனைகளை ஏற்படுத்தி ஊதிய முரண்பாடுகளை மேலும் சிக்கலாக்கியதுடன் மிகுந்த காலவிரயங்களையும் ஏற்படுத்தினர். கடந்த 20 ஆண்டுகளில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை களைவதற்காக அமைக்கப்பட்ட குழுக்கள் எதுவும் அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை கவனத்தில் கொள்ளாமலேயே தங்களின் விருப்பப்படி சமச்சீரற்ற ஊதிய மாற்றங்களை ஏற்படுத்தி மீண்டும் மீண்டும் அவர்களை போராட்ட களங்களுக்கு தள்ளியுள்ளன.

இந்தியாவில் பிற மாநிலங்களில் அரசுத்துறைகளில், அரசுப்பள்ளிகளில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் துய்க்கின்ற உரிமைகளைத்தான் தமிழக அரசிடம் நாம் கோருகின்றோம். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் தமிழகத்தில் உள்ள அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் என அறிவித்துவிட்டு, அடிப்படை சம்பளம் தவிர்த்து மற்ற அம்சங்களில் மிகுந்த பாகுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதைப்போலவே

ஊதிய மாற்றங்களில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை சரிசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையை 2006ல் எற்படுத்தப்பட்ட ஊதிய மாற்றத்திலிருந்தே தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரிபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என அரசு அறிவித்தது பல ஆண்டுகளாக கிடப்பில் உள்ளது. புதிய ஓய்வூதியத் திட்டம் திரும்பப் பெறப்படும் என 2011 தேர்தல் அறிக்கையிலேயே உத்தரவாதம் வழங்கி ஆட்சிக்கு வந்த அதிமுக அதன்பின் நான்கு ஆண்டுகளாக மௌனம் காத்தது. அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்டங்களை முன்னெடுத்த பின்னர் வல்லுநர் குழு அமைத்து மூன்று ஆண்டுகளாக அதன் காலம் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருவதுமான போலி நாடகங்களும், சொல்லி நிறைவேற்றிடத் தவறிய வாக்குறுதிகளும்தான் அரசு ஊழியர்களை போராட்டக் களத்திற்கு இழுத்து வந்துள்ளது.

இந்திய ஜனநாயகத்தில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் அரசின் பொக்கிஷங்களாகக் கருதப்பட்ட நிலைமாறி அவர்களெல்லாம் இப்போது தலைகீழாகத் தொங்கவிடப்பட்டுள்ளனர். அரசின் திட்டங்களை செயல்படுத்துவதிலும் மக்களுக்கான சேவைகளை அரசின் திட்டங்களை கடைசி பொதுஜனம் வரை கொண்டு சேர்ப்பதிலும் அரசு ஊழியர்களின் பங்கு மகத்தானதாக இருந்ததால் அவர்கள் அரசாங்கத்தின் தூதுவர்களாக மக்களால் பார்க்கப்பட்டனர். ஆனால் இன்றைய நிலையில் மக்களுக்கான திட்டங்களையும், சேவைகளையும் அரசாங்கங்கள் நிறுத்திக்கொள்ள முடிவு செய்துவிட்ட நிலையில் எந்த அரசாங்கமும் அரசு ஊழியர்களைப் பற்றி பெரிதாக கவலைப்படத் தேவையில்லை என முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. மக்களுக்கான திட்டங்களும் வெறும் அறிவிப்புகளாகவும், விளம்பரங்களாகவும், அதை அறிவித்ததே அரசாங்கத்தின் சாதனைகளாகவும் மிகைப்படுத்தப்பட்டு முதல்பக்க விளம்பரங்களாக வருகின்றன.

சமதர்ம சமுதாயம், சமூகநீதி ராஜாங்கம், மக்கள் நல அரசாங்கம் என்றெல்லாம் தேர்தலுக்கு முன்பு பேசிவிட்டு வந்த ஒரு கட்சிதான் தனியார்மயத்தின் மீது தணியாத மோகம் கொண்டு அவுட்சோர்சிங் முறைக்கு இப்போது அரசாணை வெளியிடுகிறது. அதனை சட்டமன்றத்தில் நியாயப்படுத்தவும் செய்கிறது. சர்வாதிகாரம் தன் உண்மை முகத்தை காட்டத் துவங்கியுள்ளதன் அடையாளம்தான் இது. பதவியேற்று இரண்டு ஆண்டுகள் முடியும் தருவாயில் உள்ள நிலையிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் தேர்தலுக்கு முன்பு அரசு ஊழியர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட இதுவரை நிறைவேற்றவில்லை என்பது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மட்டத்தில் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. பட்ஜெட் உரையில் அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்கான கடன் வரம்பை ரூ.40 லட்சத்திலிருந்து ரூ.50 லட்சமாக உயர்த்தி வெளியிட்டுள்ள அறிவிப்பானது, இன்றைய பொருளாதார சூழலில் வாழ்வாதாரம், பிள்ளைகளின் படிப்பு, பெண்ணின் திருமணம், மருத்துவச் செலவு போன்றவற்றிற்காக தத்தளிக்கும் அரசு ஊழியர்களைப் பார்த்து கேலி பேசுவதாக உள்ளது. வீட்டை அடமானம் வைக்கலாமா அல்லது விற்றுவிடலாமா என்று விழிபிதுங்கி நிற்கும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வீடுகட்டும் கடனை ரூ.10லட்சம் உயர்த்தியிருப்பது உயர்ந்தபட்ச நகைமுரணாகும்.

அரசுத்துறைகளில் எந்த ஒரு பணியும் திட்டமிடுவதிலிருந்து செயலாக்கம் பெறுவது வரை அமைச்சுப் பணி, சேவைப்பணி, தொழில்நுட்பப் பணியை ஆதாரமாகக் கொண்டுள்ளன. அரசு அறிவிக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள அறிவியல் ரீதியான அளவீடுகளின் அனைத்துப் பணிப்பிரிவின் கீழ் புதிய பணியிடங்கள் உருவாகக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். ஓய்வு, பணித்துறப்பு, இறப்பு மற்றும் பதவி உயர்வுகளால் காலியான பணியிடங்கள் நிரப்பப்படாததாலும், அரசின் பல்வேறு துறைகளிலும் உள்ள அமைச்சுப்

பணியாளர்கள் கடுமையான பணிப்பளுவை சுமந்துகொண்டு அல்லல்பட்டு வருவதாலும், சட்டப்படி தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளை தராமல் நிறுத்திவிட்ட நிகழ்வுகளாலும் ஆட்குறைப்பு, பணியிடக்குறைப்பு, வேலைப்பளு அதிகரிப்பு போன்ற காரணங்களினாலும் அரசு ஊழியர்கள், இருக்கின்ற சில மக்கள்நலத் திட்டங்களையும் முழுமையாக நிறைவேற்றிட முடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலைமைகளை மாற்றிடவே அரசு ஊழியர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கிறார்கள். இப்போது இந்தப் போராட்டங்கள் புரட்சியாக வெடித்துக் கிளம்ப வேண்டிய கால வளையத்திற்குள் வந்திருக்கிறது. இருபது வருட கோரிக்கைகள் இன்னும் கிடப்பிலேயே உள்ளன.

திமுக ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதியத் திட்டம் திரும்ப கொண்டுவரப்படும் என்று வாக்குறுதி அளித்து முதல்வரான திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் கொடுத்த வாக்குறதியை நிறைவேற்றாத நிலையில், வாக்குறுதி கொடுக்காத மற்றும் கொடுத்த வாக்குறுதிபடி பதவியேற்றதும் முதல் அறிவிப்பாக கையெழுத்திட்டு நான்கு மாநிலங்கள் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல் படுத்தியுள்ள நிலையில் சென்ற பட்ஜெட்டில் தமிழ்நாடு அரசு பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வருவதற்கு சாத்தியமேயில்லை என தெரிவித்திருந்த நிதியமைச்சர் இந்தமுறை அதைப் பற்றி ஒரு வார்த்தைக்கூட பேசாதது அரசு ஊழியர்களின் முழு நம்பிக்கையாளனாக இருக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசாங்கம் அரசு ஊழியர்களின் முதுகில் குத்தியிருப்பதாகவே அரசு ஊழியர்கள் பார்க்கிறார்கள். மேலும் அரசு ஊழியர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் தரவேண்டியிருப்பதாகவும் அதனால்தான் அவுட்சோர்சிங் என்ற கொத்தடிமை கூலிமுறையை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும் அதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவு தர வேண்டும் என்றும் தற்போதுள்ள அரசு ஊழியர்களை கொச்சைபடுத்தும் வகையிலும், அவமானப்படுத்தும் வகையிலும் நிதியமைச்சர் பேசியுள்ளார். அரசு ஊழியர்கள் வேலையில் சேர்ந்த உடனேயே ஒரு லட்ச ரூபாய் சம்பளம் பெறுவதைப் போன்ற வெறுப்புப் பேச்சை சட்டமன்றத்தில் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார் மாண்புமிகு நிதியமைச்சர். இதற்கும் மேலே ஒருபடி போய் அவுட்சோர்சிங் முறையில் ஆளெடுப்பதுதான் சமூகநீதி என்று தன்னுடைய புதிய ஆராய்ச்சி முடிவை சட்டமன்றத்தில் அள்ளித் தெளித்திருக்கின்றார். பெரியார், அண்ணா, கருணாநிதி போன்ற சமூக நீதிக்காக போராடிய திராவிடத் தலைவர்களின் வழியில் வந்த திமுக ஆட்சியில் நிதியமைச்சராக இருக்கக்கூடிய ஒருவரை இப்படி பேச அனுமதித்திருப்பதிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழக அரசு சமூக நீதியை மூட்டைகட்டி வைக்க ஆயத்தமாகிவிட்டது என்பது தெளிவாகிறது.

உறுதியளித்தபடி வருடந்தோறும் 3 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்காதிருத்தல், அரசுத்துறைகளில் காலியாக உள்ள 6 லட்சம் பணியிடங்களை நிரப்பாமல் வைத்திருத்தல், சத்துணவு ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்காமல் உள்ளது, சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக்கப்படாமல் உள்ளது, சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிவரன்முறை செய்து 41 மாத ஊதிய இழப்பை வழங்கிட வைக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்படாமல் உள்ளது போன்ற நிலுவை கோரிக்கைகள் அரசு ஊழியர்களை கொந்தளிப்பில் ஆழ்த்தியுள்ளது. ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வை தாமதிக்காமல் உடனே மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவதே உண்மையான சமூக நீதி. அதேபோல சரண்விடுப்பு ஒப்புவிப்பு மறுஉத்தரவு வரும்வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது அரசு ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி, இவை போக 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை உடனே வழங்குதல், தனியார்மய அரசாணைகளை இரத்து செய்தல்,

அரசுத்துறையில் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிடுதல் போன்றவைகளை முற்றிலும் மறந்துவிட்டதுபோல இந்த அரசு செயல்படுவது அனைவரையும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், ஜாக்டோ ஜியோ கூடடமைப்பு, துறைவாரி சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தற்போதைய தமிழ்நாடு அரசின்மீது, குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் உடைந்து சுக்குநூறாகி உள்ளது. அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டம், பறிக்கப்பட்ட சரண்விடுப்பூதியம், தாமதப்படுத்தி வழங்கப்பட்டு அகவிலைப்படி உயர்வு, நிறைவேற்றப்படாத தற்காலிக பணயாளர்களின் பணிநிரந்தரம், தொகுப்பூதியத்தில் இருப்பவர்களை காலமுறை ஊதியதிற்கு மாற்றுதல், தனியார் முகமைகளின் மூலம் சொற்ப ஊதியத்தில் அரசுத் துறைகளில் நிறைவேற்றும் மறைமுக தனியார்மயத்தை ஒழித்து குறைந்தபட்ச நியாயமான ஊதியங்களை உறுதிப்படுத்தும் அரசின் நேரடி நிரந்தர பணிநியமனங்கள் போன்ற நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை உறுதியான மற்றும் விடாப்பிடியான இயக்கங்கள் நாம் நடத்திட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. அதன் இன்னொரு துவக்கமாக 11.04.2023 அன்று ஜாக்டோ ஜியோ அமைப்பில் பிரதான இடம் பெற்றுள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், ஆசிரியர் மற்றும் அரசுப் பணியாளர் அமைப்புகள் நம்முடைய கோரிக்கைகளை இந்த அரசு கடந்த இரண்டு ஆண்டுகளாக கண்டுகொள்ளாமல் உள்ளதை உணர்த்தும் விதமாக வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி கோட்டையை முற்றுகையிட்டு கொடுத்த வாக்குறுதியை மறந்துவிட்ட முதல்வர் அவர்களுக்கு நினைவூட்டல் செய்வோம்.

எனவே தோழர்களே எந்தியவான் கொஞ்சம் இளைப்பாறட்டும் சட்டமன்ற கூட்டத்தொடர் முடிவதற்குள் நல்ல செய்திகள் வரும் என்ற நம்பிக்கையில் நம்முடைய கோட்டை முற்றுகை போராட்டத்தை கொஞ்சம் ஒத்திவைப்போம்.

நாம் மேற்படி கோட்டை முற்றுகை அறிவிப்பை வெளியிட்டு அதற்கான ஆயத்த ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்த வேளையில், அரசிடம் இருந்து நமக்கு பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு வந்தது மாண்புமிகு அமைச்சர்கள், திரு.ஏ.வ.வேலு திரு.தங்கம் தென்னரசு மற்றும் அன்பின் மகேஸ் ஆகியோர் முன்னிலையில் 08.04.2023 தேதி ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் நம்பிக்கையளிக்கும் விதமான பேச்சுவார்த்தை நடத்தினோம். நம்முடைய கோரிக்கைகளை அக்கறையுடன் கேட்டு அவை குறித்து முதல்வரிடம் தெரிவித்து சாதகமான பதிலை முதல்வர் அறிவிக்க முயற்சி செய்வதாக மாண்புமிகு அமைச்சர்கள் கூறியதன் அடிப்படையில் நாம் இந்த சட்டமன்றக் கூட்டதொடர் முடிவதற்குள்ளாகவே அறிவிப்புகள் வெளியாகினால் நன்றாக இருக்கும் என தெரிவித்து அதுவரை நமது முற்றுகைப் போராட்டத்தை ஒத்திவைக்கிறோம். ●

## கூடா ஒரு கோப்பை சூப்

### வேறென்ன வழி நமக்கு?

போராடிப் பெற்றவற்றைப்
போராடி மீட்க வேண்டும்;
போராடி மீட்டவற்றைப்
போராடி காக்க வேண்டும்!

போராடும் வழியை விட்டால்
புதுவாழ்வு என்பதற்கு
வேறென்ன வழி நமக்கு
விடியலைக் காண்பதற்கு?

# முதல்வரின் அறிப்புக்காக முற்றுகைப் போராட்டம் தற்காலிகமாக தள்ளி வைப்பு !

## தேர்தல் வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கை இருக்கு!

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே! அரசு இயந்திரத்தின் தலைமை பீடத்தில் இருக்கும் தங்களுக்கு அந்த இயந்திரத்தின் அச்சாணியாய் இருக்கும் அரசு ஊழியர், ஆசிரியர்கள் கோட்டை முற்றுகை போராட்டம் என்பது விருப்பத்தின் வகைப்பட்டது அல்ல. காலமும், சூழலும் தான் இவ்வாறான போராட்டத்திற்கான நிர்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. நேற்று போல் இருக்கிறது. ஆனால்... இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் 2021ல் நடந்த சட்டமன்ற தேர்தலின் போது பிரச்சார மேடைகளில் ஒலித்த குரல்களில் தெறிந்த வார்த்தைகள், வாக்கியங்கள் அர்த்தம் பொதிந்ததாய், பலவகையில் அல்லப்பட்டு வரும் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு அருமருந்தாய் தோன்றியது. விடியல் நிச்சயம் என்ற நம்பிக்கை ஏற்படுத்தியது. நம்பிக்கைத் தரும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி இரண்டு ஆண்டுகளில் சங்கங்களின் தலைவர்களை சந்திக்கவும், எங்கள் மாநில மாநாட்டிலும் , ஜாக்டோ-ஜியோ வாழ்வாதார மாநாட்டிலும் தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி முறையாக ஆசிரியர், அரசு ஊழியர் அமைப்புகள் முறையீடு கொடுத்தோம். பயனற்று போனதால் பல லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உங்களை நேரில் சந்தித்து முறையிடவே திரண்டு வருகிறோம் ஏப்ரல் 11 ? என்ன பிரச்சினை?

ஏனெனில்... தாங்கள் ஆட்சிக்கு வந்தால் பழைய பென்சன் அமுல்படுத்தப்படும். சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் எனும் கொத்தடிமைக் கூலி முறையை ஒழித்து விட்டு அனைவருக்கும் முறையான காலமுறை ஊதியம் வழங்கபடும் என தாங்கள் கூறியதைக்கேட்டு நாங்கள் மிகுந்த நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் இந்த இரண்டு ஆண்டுகளாய் காத்திருக்கின்றோம்.

**தீர்க்கப்படாத பிரச்சினைகள், கொத்தடிமை கூலி முறையை ஒழித்திடுக**

எங்கே நாங்கள்....நாங்கள் குறிப்பிடுவது ஒரு தலைமுறை முற்றாய் வெந்தணலில் செவந்து வாழ்வை தொலைத்த சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு முன்பிருந்தே பணியாற்றி வருகின்ற இன்றைய வருவாய் கிராம உதவியாளர்கள், நூல்களை தெய்வமாக மதிக்கும் பண்பாடு மிக்க இந்த நாட்டில் கிராமங்களில் அரிய பணியை செய்து வரும் கொத்தடிமை கூலிகளான ஊர்புற நூலகர்கள், கொரோனா காலத்தில் உயிரை துச்சமென மதித்து இரவு, பகல் பாராது மக்களுக்கு சேவையாற்றி செவிலித்தாய் என்று கூறப்படும் எம்.ஆர்.பி. செவிலியர்கள், கணினி இயக்குபவர்கள், முழு சுகாதார திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், தமிழகத்தின் தெருக்கள் நாற்றமெடுக்காமல் சுத்தம் செய்து வரும் துப்புரவு ஊழியர்கள்(தற்பொழுது தமிழ்நாடு அரசு ஆணை 115,152,139,10 போன்ற ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு மாநகராட்சி, பேரூராட்சி, நகராட்சிகளில் அவுட்சோர்சிங், ஒப்பந்தமுறை கொண்டு வந்துள்ளது.)

குடிநீர் தேவையை குறைந்த ஊதியத்தில் நிறைவேற்றி வரும் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்கள், தோட்டக்கலை, பண்ணை ஊழியர்கள், வனத்துறை காவலர்கள் என உங்களால் உருவாக்கப்பட்டு இன்று மூன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் அனைத்துத்துறைகளிலும் நவீன கொத்தடிமைகளாக உள்ளனர். இவர்களோடு சேர்த்து பொது சுகாதாரத்துறை, மருத்துவத்துறையில் அதிக அளவில் ஒப்பந்த முறையில் நியமிக்கப்படுபவர்களையும் சேர்த்துதான்...

இந்திய அரசியல் சாசன விதி 43 பகுதி 4ல் இம்மண்ணில் 76 ஆண்டுகளுக்கு முன்

ஏற்கப்பட்ட இந்த அரசியல் சாசன விதியின்படியான தங்கள் வாக்குறுதி கடந்த இரண்டு ஆண்டுகளாக கண்டு கொள்ளப்படவே இல்லையே - ஏன்? என்பது தான் எங்கள் கேள்வி. மேலும் கடந்த மூன்று பட்ஜெட் கூட்டத் தொடரில் எங்களின் வாழ்வாதார கோரிக்கை ஒன்றைக்கூட நிறைவேற்றப்படவில்லை. (இந்த அரசை ஆட்சியில் அமர வைத்ததில் பிரதான பங்கு எங்களுக்கு உண்டு) அரசு என்பது முன் மாதிரியான முதலாளியாகத் திகழ வேண்டும் என்றும், தன் ஊழியர்களுக்கு நியாயமான ஊதியத்தை வழங்க இயலாத நிறுவனங்கள் இயங்கத் தகுதியற்றது என்றும் நிதிமன்றங்கள் சுட்டிக்காட்டியுள்ளன என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

**வறுமை ஒரு பாவமல்ல. அது ஒரு சமூகக் கொடுமை**

ஆம். அரசு தன்னிடம் பணியாற்றும் லட்சோப லட்சம் ஊழியர்களை அவர்களது குடும்பங்களை தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருப்பது என்பது சட்டத்தின் வழி செயல்படும் ஜனநாயக அரசுக்கு இலக்கணமாகாது.

எனவே தான் ஒரு நாட்டின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய வகையில் வேலை அளிப்பவருக்கும், வேலை செய்பவர்களுக்கும் இடையே சம்பளப் பிரச்சினையில் மோதல் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இந்திய அரசியல் சாசனம் உருவாக்கப்படுவதற்கு முன்பே தேசிய சம்பளக் கொள்கை ஒன்றை அரசு வகுத்தது. அதில் பல்வேறு அம்சங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில..

1. நியாயமான ஊதியம் வழங்க பேச்சுவா௱த்தையின் சூமகத்தீர்வு காணுதல், உரிய சட்டங்கள் இயற்றி செயல்படுத்துதல்
2. மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை உள்ள பல்வேறு படி நிலைகளிலுள்ள வேலைகளில் பணியாற்றும் ஊழயர்களின் ஊதியத்தில் பெருத்த சம்பள வேறுபாடு இல்லாமல் பார்த்து கொள்ளுதல்.
3. விலைவாசி உயர்வுக்கு ஏற்ப சம்பளத்தை உயர்த்துதல்.
4. தொழிலாளர்கள் சுதந்திரமாக வேலை செய்யும் வாய்ப்பை உறுதி செய்தல்.

மேலே சுட்டிக்காட்டியவாறு ஆட்சி செய்கின்ற அரசுகள் நடைமுறைப் படுத்தபடுகின்றனவா என்றால் இல்லை. 'ஆனால் இந்தியாவில் கடந்த காலங்களில் ஒவ்வொரு ஐந்தாண்டும் திட்டங்கள் உருவாக்கும்போதெல்லாம் தேசிய சம்பளக் கொள்கை சம்பந்தமாகவும் ஆய்வு செய்து சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்பது இதில் அடங்கிய அம்சமாகும்.

மேலும் தேசிய சம்பளக் கொள்கையின்படி சம்பளம் வழங்குவதை உத்திரவாதப்படுத்திட குறைந்தளவு ஊதியத்திட்டம் 1948 எனும் சட்டம் நாடு விடுதலைப் பெற்றபின்பு உருவாக்கப்பட்டது. அதில் குறைந்தபட்ச ஊதியம், வாழ்க்கை ஊதியம், தேவைக்கேற்ற ஊதியம் வழங்க வேண்டும். இவற்றோடு தொழிலாளர்களை ஊக்கப்படத்தும் வகையில் சில சலுகைகளும் வழங்க வேண்டும். அவை மருத்துவம், உடல் நலம் பேணுதல், குழந்தைகள் கல்வி, குறைந்த விலையில் உணவுப் பொருட்கள், வீட்டுவசதி, ஆயுள் காப்பீடு.

மேற்காணும் தேசிய சம்பளக் கொள்கை மற்றும் குறைந்தளவு ஊதியச் சட்டம் 1948ன்படி ஆளும் அரசுகள் தொழிலாளர்களுக்கும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கினால் ஊதிய கோரிக்கை சார்ந்த போராட்டங்கள் உருவாக வாய்ப்பே இல்லை. ஆனால் ஆட்சியாளர்கள் இந்த சட்டத்தை கண்டுகொள்ளாத காரணத்தால் நீடித்த போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான ஊதிய பாதுகாப்பின் சட்டங்கள் இருக்கும் இன்றைய நிலையில் தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் போன்ற அத்தக்கூலி முறைகள் ஏற்புடையதல்ல. அவற்றை ரத்து செய்து விட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்குக என சங்கங்கள் கோரிக்கை வைத்தால் சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் குறைந்தளவு நேரம் வேலை பார்க்கும் பகுதி நேர ஊழியர்கள். எனவே காலமுறை உதியம் வழங்க முடியாது

(39ஆண்டுகளாக பணி புரிகிறார்கள்) என்ற வாதம் எழுகிறது. சத்துணவு திட்டம் நிரந்தரம். அதில் பணிபுரியும் ஊழியர்கள் நிரந்தரம் இல்லை. இன்றைய முதல்வர் குழந்தை நலன் கருதி 1 முதல் 5 வகுப்பு வரை காலை உணவு வழங்கும் திட்டத்திற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இத்திட்டத்தை சுய உதவிக்குழுக்களிடம் கொடுப்பதைத் தவிர்த்து சமூக நலத்துறையிடம் உள்ள சத்துணவு ஊழியர்களை வைத்து அமுல்படுத்திட வேண்டுமெனவும் முதல்வரை கேட்கிறோம். இரவு பகல் பாராது 24 மணி நேரமும் உழைக்கும் கிராமத்து போலிஸ் என்று அழைக்கும் வருவாய் கிராம உதவியாளர்கள் அடுக்கடுக்காய் அரசு சுமத்தும் பணிகளை அல்லும் பகலும் செய்து வரும் தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க மறுப்பது, மேற்ப்டி சட்டத்தின்படி முரணாக உள்ளதே. இத்தகைய முரண்பாடுகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் தேசிய சம்பளக் கொள்கைகளை, குறைந்தளவு ஊதியத் திட்டம் 1948ன்படி மிகத் தெளிவாக உருவாக்கப்பட்டுள்ளன. அதுமட்டும் அல்லாது ஒரு தொழிலாளிக்கு அல்லது ஒரு அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு வழங்கப்படும்

ஊதியம் எதை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதை சர்வதேச தொழிலாளர் ஆணையம் தெளிவாக வரையறுத்து கூறியுள்ளதையும் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஒரு ஊழியர் அல்லது ஒருதொழிலாளிக்கு வழங்கப்படும் ஊதியம் என்பது அந்த தொழிலாளி குடும்பத்திற்கு அன்றைய விலைவாசிப்படி என்ன தேவையோ அத்தொகை ஊதியமாக நிச்சயிக்கப்பட வேண்டும் என்று ஐ.எல்.சி (International Labour Commission) வரையறுத்துள்ளது. ஒரு குடும்பம் என்பதில் தாய் , தந்தை, சேர்க்கப்படவில்லை என்பது மனித நேயமற்றது என்றாலும் ஊதியம் என்பது பார்க்கும் வேலைக்கானது மட்டுமல்ல. அந்த ஊழியரின் ஒட்டுமொத்த குடும்பம் சகல செலவு காரியங்களுக்கான வாழ்வதற்கானது என்பதை மிகத்தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளதை நாம் காண முடியும்.

எனவே தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங் ஒப்பந்த கூலி போன்ற கொத்தடிமை கூலி முறைகளை ரத்து செய்து விட்டு அனைவருக்கும் முறையான காலமுறை ஊதியம் வழங்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

1. 1.4.2003க்குப்பிறகு அரசுப்பணியில் சேர்ந்தோருக்கு தற்பொழுது நடைமுறைப்படுத்தி வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினை கைவிட்டு பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே அமுல்படுத்திட வேண்டும்.
2. 2021 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்று மூன்று முறை அறிவிக்கப்பட்ட அகவிலைப்படியானது ஆறு மாத காலம் கடந்து வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஒன்றிய அரசு அறிவித்துள்ள 4 சதவீத அகவிலைப்படி குறித்து தமிழ்நாட்டில் பணி செய்யும் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. ஒன்றிய அரசு அறிவிக்கும் அகவிலைப்படிக்கு இணையான அகவிலைப்படியினை ஒன்றிய அரசு அறிவிக்கும் தேதியிலிருந்தே அறிவித்து நிலுவை தொகை வழங்கப்பட வேண்டும்.
3. காலவரையறையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண்டர் உடனடியாக வழங்கிட வேண்டும்.
4. 1.1.2016 முதல் வழங்க வேண்டிய 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத்தொகை அரசு ஊழியர், ஆசிரியர் ஆகியோருக்கு மறுக்கப்பட்டுள்ளதை உடனடியாக வழங்க வேண்டும்.
5. சாலைப்பணியர்களின் 41 மாத பணி நீக்கக் காலத்தை பணிக்காலமாக வரன்முறைப்படுத்த வேண்டும்.
6. அரசின் பல்வேறு துறைகளில் 30 விழுக்காட்டிற்கு மேலாக (6 லட்சம்) காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

7. முதுநிலை ஆசிரியர், இடைநிலை ஆசிரியர், தொடக்கப்பள்ளி ஆசிரியர், தலைமை ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர், தலைமைச் செயலக ஊழியர்கள், தொழில் நுட்ப ஊழியர்கள் ஆகியோருக்க ஊதிய முரண்பாடுகளை களைந்து ஊதிய உயர்வு வழங்கி அநீதி களையப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை வைத்து போராடும்போது நிதியமைச்சர் மாண்புமிகு பழனிவேல் தியாகராஜன் அவர்களின் அரசு ஊழியர், ஆசிரியர் நிலைபாட்டை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நேரடியாக தெரிவிக்கும் ஒரு வாய்ப்பு ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் 1.8.2022ல் தெரிவித்தபோது அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கும் சம்பளத்தை அரசுக்கு பெரிய சுமையாகவும், அரசுஊழியர், ஆசிரியர்கள் ஏற்கனவே மாத சம்பளம் ஒரு லட்சம் வாங்கும் நிலையில் ஊதிய உயர்வு கேட்கிறார்கள் என்று ஊடகங்களில் அடிக்கடி பிரச்சாரம் செய்து சமூகத்தில் அரசு ஊழியர், ஆசிரியர்கள் அரசுக்கு பெருஞ்சுமைபோல் பேசி வருகிறார் என்று முதல்வரிடம் கூறினோம். பார்த்துக்கொள்கிறேன் என முதல்வர் தெரிவித்தார்.

மேலும் அரசு ஊழியர்கள் கொரோனா காலத்தில் அரசின் நிதிச்சுமை காரணமாக தங்களின் உரிமைகளான அகவிலைப்படி உயர்வு, சரண்விடுப்பு காசாக்குதல் போன்றவற்றை இக்கட்டான சூழ்நிலையில் அரசுடன் நிற்க வேண்டும் என்ற சமூக அக்கறையில் தங்கள் உரிமைகளை விட்டுகொடுத்தனர். இப்படி அரசு ஊழியர்கள் விட்டுக்கொடுத்த உரிமைகளை அரசின் நிதி நிலைமை சீரடைந்த பின்னர் கேட்பது சமூக அநீதி என்று கூறுகிறார் நிதி அமைச்சர்.

மீண்டும் கடந்த மார்ச் 27ம் தேதி சட்டமன்றத்தில் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் வெளியிடப்பட்ட தொகுதி I-A தேர்வு முடிவுகளில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அளித்த பதிலுரையில் நிதி அமைச்சர் அந்த 5 அரசு ஆணை வரும்போது பலர் எதிர்த்தார்கள். Temporary Employees அரசில் வேலை செய்கின்றனர். அவர்களுக்கெல்லாம் ஒரு Minimum ஆவது கொடுக்க வேண்டும் என்று நாங்கள் சொன்னோம். சில பேர் தற்காலிகமாக இருந்து கொண்டு ரு.5000, ரு.8000, ரூ.10000 எல்லாம் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் முழு நேரப்பணிகளில் பல லட்சம் ரூபாய் வாங்குகிறார்கள். இது நியாயமல்ல. இதனால் அவுட்சோர்சிங்கு ஒரு Statndard போட்டு இவர்களையெல்லாம் PFல் ESIல் சேர்க்க வேண்டும் என்பதற்கான இந்த அரசு ஆணைகளை நாங்கள் கொண்டு வந்தோம். அதையெல்லாம் எதிர்த்து இல்லை, சமக நீதியை எதிர்த்து இப்படி சொல்கிறீர்கள் என்றால் சமூக நீதி அடிப்படையில் மனித வளத்துறையை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலும் எந்த அரசுக்கும் பின் தங்கிய அரசு இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் நானும் எல்லா வகையிலும் சீர்திருத்துவதற்கு முதல் ஆளாக நான் நிற்கிறேன். எல்லோரும் ஒத்துழைத்து இந்த மாநிலத்தின் நலனுக்காக செய்ய வேண்டிய முயற்சிகளை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்று கூறினார்.

மேற்கண்ட அரசு ஆணை இட ஒதுக்கீட்டிற்கு எதிராகவும், இளைஞர்களின் அரசு வேலை வாய்ப்புகளை தகர்க்கும் விதமாக இருந்ததால் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசு ஆணையை ரத்து செய்ய வலியுறுத்தி 8.11.2022 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தினோம். தமிழ்நாடு முதலமைச்சர் அரசு ஆணை 115ல் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கான ஆய்வு வரம்புகளை இரத்து செய்து உத்தரவிட்டார்.

இவ்வாறு இருக்க மீண்டும் நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசியிருப்பது என்பது உள்ளபடியே மனித வள மேலாண்மை துறை என்பது முழுக்க முழுக்க கார்ப்பரேட் பாதையில் சென்று கொண்டு இருக்கிறது என்பதை தெளிவுப்படுத்தியுள்ளது. மேலும் நிதி அமைச்சரின் பேச்சானது இந்திய நாட்டிலேயே முன் மாதிரி மாநிலமாக அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கிய ஆட்சியினை நடத்தியிருக்க வேண்டும்.

திராவிட மாடலுக்கு எதிரானதாக அமைந்துள்ளது. வெளிமுகமை மூலமாக பணியாளர்களை அமர்த்தும்போது அந்த வெளி முகவை 69 சதவீத இட ஒதுக்கீடு எந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக பல லட்சம் பேர் கலந்து கொண்டு போட்டித் தேர்வுகளில் தேர்வான முழு நேர பணியாளர்களை தற்காலிகப் பணியாளர்களோடு ஒப்பிடுவது எந்த விதத்தில் நியாயம்? திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் அரசுப் பணியில் 6 லட்சம் காலி பணியிடம் நிரப்பப்படும் என்ற வாக்குறுதிக்கு மாறாக அவற்றை தனியார் மூலம் நிரப்புவதுதான் நிதி அமைச்சரின் நோக்கமா? அது மட்டுமல்ல. இனிமேல் நிரந்தர ஊழியர் அதாவது அரசுப் பணி என்பது எட்டாக் கனியாக மாறுகின்ற நிலை ஏற்படும். அதேபோல் நிரந்தர ஊழியர் எண்ணிக்கை குறையும். அவுட்சோர்சிங் ஊழியர் எண்ணிக்கை துறைகளில் அதிகரிக்கும். எனவே சமூக நீதி என்ற வாதத்திற்கான உண்மையான அர்த்தம் என்னவென்று தெரியுமா என்ற பெரிய சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மீண்டும் மீண்டும் பேசி வருவது, அரசு ஊழியர், ஆசிரியர்களை சீண்டிப் பார்க்கும் செயல் ஆகும். அதிலும் முதியோர் பெரும் ஓய்வூதியத் தொகை ரூ.1000த்துடன் அரசு ஊழியர், ஆசிரியர்கள் பெறும் ஓய்வூதியத்துடன் ஒப்பிட்டு பேசியிருப்பதற்கு கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளோம்.

அரசு ஊழியர்கள் வேலைக்காக வந்தவர்கள் அவர்கள் சட்டப்படி தங்களுக்கு கிடைக்க வேண்டிய ஊதியத்திற்காக போராடுவது சமூக அநீதியாகத் தெரிந்தால் அரசியலில் சேவை செய்ய வந்தோம். சேவை செய்ய வருபவர் என்று சொல்லும் நிதி அமைச்சர் அவர்களே மாதம் ஒரு லட்சம் சம்பளம் , கார், டிரைவர், காவல் அதிகாரி, நேர்முக உதவியாளர் மூன்று பேர், இதர படிகள் என்று மாதம் 10 லட்சம் ரூபாய் செலவு செய்து ஆண்டுக்கு எவ்வளவு என்று உங்களுக்கு தெரியும். இது அரசு க்கு சுமை இல்லையா? அப்படி அரசுக்கு சுமை என்றால் தாங்கள் வேண்டாம் என்றுகூற முன் வராமல் அதை அனுபவித்துக்கொண்டிருப்பது மட்டும் சமூக நீதி என மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே !

இங்கு சுட்டிக் காட்டப்பட்டவை தீர்க்கப்படாத பிரச்சினைகளில் சில மட்டுமே பட்டியலிட்டால் பக்கங்கள் போதாது. இந்த பிரச்சினைகளுக்காக... இந்த போராட்டத்திற்காக... அதன் நியாயங்களை தங்களிடம் எடுத்துரைப்பதற்காக.... தாங்கள் நேரில் சந்தித்தோம். இந்த சந்திப்புகள் அத்தனையும் முழுமையான சந்திப்பாக இல்லை. எனவே கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் எண்ணற்ற இயக்கங்களை நடத்திய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஜாக்டோ-ஜியோ முத்தாய்ப்பாக கடந்த ஆண்டு செப்டம்பர் 10ம் தேதி வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டில் பங்கேற்று தாங்கள் பேசியது மறக்க இயலாது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே! தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், அரசு ஊழியர்களுக்கு சம்பளம், போனஸ், பஞ்சப்படி, வழங்க வேண்டும் என்று கோரிக்கைகளுக்காக மட்டும் போராடுகிற அமைப்பு அல்ல. களத்தில் மக்களை பாதிக்கும் எதுவாக இருந்தாலும் ஊழியர்களை திரட்டுவதும், கைகளை உயர்த்தி குரல் கொடுப்பதும் என்ற பாரம்பரியம் கொண்டது என்பது தாங்கள் அறிந்ததே. இப்போதும் கூட... பெருந்தொற்று கொரோனா காலத்திலும் தமிழகத்தில் பெய்த கடும் மழை வெள்ளத்தால் குறிப்பாக சென்னை மக்களோடு மக்களாய் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அனைத்தையும் புறம் தள்ளி மக்கள் துயர் துடைக்க களமிறங்கி பணியாற்றியவர்கள். லட்சோபலட்சம் அரசு ஊழியர் சங்க உறுப்பினர்கள் தான் என்பது குறிப்பிடத்தக்கது மக்களுக்கு உதவிட தன் உறுப்பினர்களிடம் உண்டியல் ஏந்தி நிதி வசூல் செய்து ஒரு நாள் ஊதியமும் கொடுத்த அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

முன்பு சுனாமியின் போதும், தானே புயலின்போதும் ஏன்? கடந்த காலங்களில்

பல்வேறு மாநிலங்களில் ஏற்பட்ட இயற்கை சீற்றங்களின்போதும் இன்னும் சர்வதேச அளவில் மக்கள் பாதிக்கப்படும்போதும் தன்னால் ஆன நிவாரண பணிகளுக்காக உதவிகளை செய்துள்ளது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

இத்தகைய சமூக பார்வை கொண்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், ஜாக்டோ-ஜியோ அமைப்பும் இன்று தமிழக அரசிடம் முன்வைத்துள்ள கோரிக்கை வெறும் பொருளாதாரக் கோரிக்கைகள் மட்டுமல்ல. அவை சமூக நலன் சார்ந்ததும்தான்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக தமிழக மக்களின் நலனுக்காக என்று சொல்லி யார் யாருக்கோ நேரம் ஒதுக்கி தரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அரசு இயந்திரத்தின் அச்சாணியாக லட்சோபலட்சம் அரசு ஊழியர், ஆசிரியர்களின் நம்பிக்கை நட்சத்திரமாய் திகழும் மக்கள் நல இயக்கமான தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்ளை சந்திக்க நேரம் ஒதுக்கி அழைத்துப்பேசி கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தோழர்களே! இதுவரை தமிழக அரசு கடைபிடித்து வந்த அணுகுமுறையில் இந்த சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள வலி, வேதனை உணரப்பட வேண்டும். உணர்த்தப்பட வேண்டும்.

தான் ஏற்படுத்தும் வலி குறித்து பாராமுகமாக இருப்பவன் தீர்ப்பு கூறும் உரிமையை இழந்து விடுகிறான் என்றார் தேசியகவி இரவீந்திரநாத் தாகூர். ஆம் அந்த வலியை உணராதவர்களுக்கும் தீர்ப்பளிக்கும் உரிமை இல்லை என்பதே உண்மையாகும். அத்தயை சூழலில் நல்ல தீர்ப்புக்காக அதை வழங்குவதற்காக உழைக்கும் மக்களின் குரல் ஓங்கி ஒலிக்கும் என்பது யதார்த்தமே. அரசு என்பது அடக்குமுறை கருவி என்ற இலக்கணத்திற்கு மாறாக உரிமை கோரி ஒலிக்கும் குரல்களோடு பேசி பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களது நியாயமான வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை கொண்டுள்ளோம். அதற்கு மாறாக அதே அடக்குமுறைகளும், அசட்டையான போக்கும் தொடரும் பட்சத்தில் முஷ்டி உயர்த்திய நம் முழக்கங்கள் என்றென்றும் தவிர்க்க முடியாததே. அதேபோல் அன்று தூக்கு மேடையில் நின்று கொண்டு சிகாகோ தியாகி ஸ்பைஸ் சொன்னானே...

நேரம் வரும் அப்பொழுது

எங்களது மௌனம்

மிக சக்தி வாய்ந்ததாக இருக்கும்

இன்று நீங்கள் குரலை

நெறிப்பதைவிட....

என்பதைப்போல மக்களின் மௌனம் வரும் காலப்போக்கில் மாற்றங்களை பிரசவிக்கும் என்பதும் வரலாற்றின் வழிப்பட்ட உண்மையே என்பதை உணர்ந்து ஆர்ப்பரிப்போடு கோட்டை நோக்கி பேரணியாய் அணி திரள்வோம்! 2023 ஏப்ரல் 11ல்.... ஒன்றுபடுவோம்! போராடுவோம்! முன்னேறுவோம்!

இந்தக் கட்டுரை எழுதி முடித்திட்ட தருவாயில் ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்களுடன் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு வந்து 08.04.2023 தேதி ஜாக்டோ -ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் மூன்று அமைச்சர்களுடன் முன்னேற்றம் தரும் பேச்சுவார்த்தை நடத்தி நம்பிக்கை விதைகளை விதைத்திருக்கிறார்கள். நம்முடைய கோரிக்கைகளின் பேரில் விளக்கம் கேட்டறிந்து முதல்வரிடம் விபரம் தெரிவித்து கூடிய விரைவில் நாம் அனைவரும் மனம் மகிழும் அறிவிப்புகளை முதல்வர் வெளியிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாண்புமிகு அமைச்சர்கள் திரு.ஏ.வா.வேலு திரு.தங்கம் தென்னரசு மற்றும் திரு.அன்பில் மகேஸ் பொய்யா மொழி ஆகியோர் உறுதி தெரிவித்து உள்ளனர். அவர்கள் கொடுத்துள்ள நம்பிக்கை வார்த்தைகளின் அடிப்படையில் நமது முற்றுகை போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது இந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே முக்கிய அறிவிப்புகள் வெளியாகும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம். ●

# மத்தியத்தர வர்க்க மனோபாவம்!

**- ஜிஜி**

நாம் வாழும் இன்றைய காலத்தில் சங்கங்கள் என்ற பெயரில் பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. சினிமா நடிகர்களுக்கு ரசிகர் மன்றங்கள் ஏராளமாக இருக்கின்றன. வருத்தப்படாத வாலிபர் சங்கம், வேலையில்லா பட்டதாரி சங்கம் என பல பெயர்களில் பல்வேறு அமைப்புகள் உள்ளன சட்டமன்றத் தேர்தலையொட்டி லெட்டர் பேடு சங்கங்கள் பல உருவாக்கப்பட்டு அவை தங்களது கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என சில கட்சிகள் அறிக்கை விட்டு வருகின்றனர் இவ்வாறு உருவாகி இருக்கிற சங்கங்களுக்கு எல்லாம் ஏதோ ஒரு நோக்கம் இருக்கிறது. அதனால் சமூகத்திற்கு என்ன பயன் என்பது தான் கேள்வி. எந்த ஒரு நோக்கத்திற்காக ஒரு அமைப்பு உருவாக்கப்படுகிறது என்பது தான் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த நோக்கம் சமூகத்திற்கு பயனுள்ளதாக சமூக மாற்றத்திற்கானதாக இருக்க வேண்டும்.

மனிதன் மிருக நிலையிலிருந்து இன்னும் முழுமையாக விடுபடவில்லை மிருகம் மட்டுமே தன்னை இயல்பூக்கத்தால் பராமரித்துக் கொள்கிறது மிஞ்சினால் தனது குட்டிகளை பராமரிக்கிறது. மனிதனும் தன்னை மட்டுமே பராமரித்துக் கொள்கிறான். மிஞ்சினால் தன் குடும்பத்தை மட்டுமே பராமரிப்பது அவனுடைய லட்சியமாக இருக்கிறது. சக மனிதர்களையும் தன்னைப்போல் பாவிக்கிற சிந்தனை எல்லோருக்கும் வரவேண்டும்.

``மனித வாழ்க்கையை நாங்கள் புனிதமாக கருதுகிறோம். ஒவ்வொரு நபரும் சுதந்திரத்தை அனுபவிக்கும் ஒரு எதிர்காலத்தை காண விரும்புகிறோம். மனித குருதி சிந்த நேரிடுவதில் நாங்களும் வருந்துகிறோம். சுரண்டலை ஒழித்து கட்டும் புரட்சியில் தவிர்க்கமுடியாமல் குருதி சிந்த நேரிடுகிறது எங்களுடைய புரட்சியின் நோக்கம் சிலரை ரத்தம் சிந்த வைப்பது அல்ல. மாறாக மனிதன் மனிதனை சுரண்டும் அமைப்புக்கு முடிவுகட்டி இந்த தேசத்தின் மக்களுக்கு சுய அதிகாரத்தையும் சம உரிமையையும் பெற்றுத் தருவதாகும்.`` என்றது இந்துஸ்தான் சோசியலிஸ்ட் ரிபப்ளிக் ஆர்மி. சந்திரசேகர ஆசாத், பகத்சிங் ஆகியோரின் தலைமையில் எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதை கொள்கைப் பிரகடனமாக வெளியிட்ட முதல் இளைஞர் அமைப்பு இது.

விடுதலை வேட்கையும் சுயமரியாதையும் இணைந்துவிட்டால் அரசாங்கத்தில் எவ்வளவு பொறுப்பில் இருந்தாலும் போராட்டப் பாதைக்கு வந்து தான் ஆக வேண்டும் என்று முழங்கினார் மேஜர் ஜெய்பால் சிங் அவர்களால் இந்திய ராணுவத்தில் சங்க அமைப்பு உருவானது.

இன்று `அத்தியாவசியப் பணி அதிகாரி` என பலர் சங்க செயல்பாடுகளில் இருந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள். ஆனால் அன்று ராணுவத்திலேயே சங்கம் இருந்தது இந்திய ராணுவத்தில் இருந்த வெள்ளையர் இந்தியர் என்ற பாகுபாடு அங்கு சங்கம் அமைக்க தூண்டுதலை ஏற்படுத்தியது. 1942 ஆம் ஆண்டு இந்திய ராணுவத்தின் ரகசிய கமிட்டி ஒன்று



அமைக்கப்பட்டது அதன் அமைப்பாளர் மேஜர் ஜெய்பால்சிங் அவர்களின் தொடர் முயற்சியின் விளைவாக 300 அதிகாரிகள் அதன் உறுப்பினர்கள் ஆனார்கள். அதன்பின் அது சங்கமாக பரிணமித்தது.

எந்த ஒரு மனிதனும் தன்னை சுற்றியுள்ள சமூகம் முன்னேற ஒரு நேர்மறை மாற்றத்தை உருவாக்குவான் என்றால் அவன் மகத்தானவனே. ஆனால் இன்றைய சமூகம் அப்படிப்பட்டதா? குடும்ப மனிதர்களாக வடிவமைக்கப்பட்ட நாம் பொது மனிதனாக சமூக மனிதனாக உருமாறும் போது குடும்பம் நம்மை எச்சரிக்கிறது. அன்பே உருவான அம்மாவும், அதிகார தோரணை மிக்க அப்பாவும், திருமண ஆண் எனில் மனைவியும் திருமணம் ஆன ஆண் எனில் மனைவியும் பெண் எனில் கணவனும் குறுக்கே வந்து நிற்கிறார்கள்.

அதனால் நம்மில் பலபேர் இயக்கத்தை தவிர்த்துவிட்டு வீட்டில் உட்கார்ந்து விடுகிறோம். சமூக பொறுப்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை குடும்ப பொறுப்பு தான் அடிப்படைக் என்று காலம் காலமாக நமக்கு போதிக்கப்பட்டுள்ளது. நமக்காக நம் சம்பளத்திற்காக போராடிவரும் சங்கத்தின் நடவடிக்கைகளில் பங்கேற்க இத்துனூண்டு வேலைசெய்ய குடும்பத்தை விட்டு ஒருநாள் வெளியே வரவே எவ்வளவு பிரச்சனை? அப்படி என்றால் அன்று ஏகாதிபத்தியத்திற்கு எதிராக விடுதலைப் போரில் பங்கேற்று போராடிய போராளிகளின் தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்களது குடும்பங்கள் என்ன ஆகி இருக்கும். இதுபற்றி மனித மனம் கவலை கொள்வதில்லை மனித மனங்களை வெல்லுகிற போராட்டத்தில் ஆளும் வர்க்கம் தொடர்ந்து வெற்றிநடை போட்டு வருகிறது. தொழிற்சங்க இயக்கங்கள் அத்திசையில் கவனமின்றி தடுமாறுகின்றன. இத்தகைய சுழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

சொந்த வாழ்க்கையில் கடந்த காலம் பற்றிய பெருமூச்சு களுடனும் எதிர்காலம் பற்றிய பயங்களும் நிகழ்காலத்தை கோட்டை விடுபவன்தான் மிடில் கிளாஸ்.

இன்று எனக்கு மட்டும் கிடைத்தால் போதும் நான் மட்டும் தப்பித்துக்கொள்ள ஏதாவது ஓட்டை கிடைக்கிறதா பாருங்கள் உலகமயம், தனியார்மயம் போன்றவை வந்தால் வந்து விட்டு போகட்டும் நமக்கு LED டிவியும், தவணையில் காரும் கிடைக்கிறதா பாருங்கள் என்கிற அளவுக்கு சுயநலமிக்கதாக ஆக உள்ளது மத்தியதர வர்க்கம்

அடிப்படையான மனித வாழ்க்கைக்கு தேவையான பொருட்கள் அல்ல... மாறாக மத்தியதர வர்க்கத்தின் ஆடம்பர வாழ்க்கைக்கு தேவையான அழகு சாதனப் பொருட்களும் நுகர் பொருட்களின் சந்தை எங்கும் நிறைந்து கிடைக்கின்றன. ஆனால் அரிசியும் பருப்பும் உற்பத்தி செய்துவிட்டு விவசாயி கூட்டம் கூட்டமாகத் தற்கொலை செய்து கொள்கிறார்கள் இதுபற்றி எந்த குற்ற உணர்வும் இல்லாமல் மெகா சீரியல்களை பார்த்துக்கொண்டிருக்கிறது மத்தியதர வர்க்கம்

மத்தியதர வர்க்க மனோபாவம் இன்று தொழிலாளி வர்க்கத்திற்குள்ளும், விவசாயி வர்க்கத்துக்குள்ளும் புரட்சிகர இயக்கங்களும் வைரஸ் கிருமியை போல பரவி வருகிறது ஆனால் ஆஷ்துரையை சுட்டுக் கொள்வதற்காக வனத்துறை வேலையை விட்டுவிட்டு மூன்று மாதங்கள் விடுப்பில் வந்த வாஞ்சிநாதனும், ``நாடு அழைத்தது ஆகவே இராணுவத்தை விட்டு வெளியேறி மக்களோடு புரட்சிகர இயக்கத்தோடு கலந்துவிட்டேன்`` என்று கோர்ட்டில் வாக்குமூலம் கொடுத்த மேஜர் ஜெயபால் சிங்கும் அரசு ஊழியர்களின் நடத்தை விதிகளின்படி வாழவில்லை, மீறினார்கள். அவர்கள் பிறந்ததும் மத்தியதர வர்க்கத்தில் தான். மத்திய தர வர்க்க மனோபாவத்தை மீறுகிற புதிய மத்தியதர வர்க்கத்தை உருவாக்க வேண்டும். அது குறித்து ஆழமாக விவாதிக்கப்பட வேண்டியுள்ளது.

குடும்ப வாழ்வுக்கும் பொது வாழ்வுக்கும் இடையே நிற்கும் குறுக்குச் சுவர்களை தகர்க்கும் நடவடிக்கையில் நாம் இறங்கியே ஆகவேண்டும்.

அதிகாரிகளுக்கு பயப்படுவதும் போராட்டங்களுக்கு பயப்படுவதும் போன்ற

குணங்கள் நமது இத்தனை ஆண்டுகால தொழிற்சங்க இயக்கத்திற்குப் பின்னும் இன்னமும் நம் தோழர்கள் கணிசமானவர்களிடம் இருக்கிறது. சில்லறை பணப்பயன்களுக்குப் மயங்கி தேசத்தின் எதிர்கால நலன்கள் பற்றி சற்றேனும் சிந்திக்காமல் ஆளும் அரசுக்கு ஜால்ரா போடும் சங்கங்களுக்கு பின்னால் ஏராளமான ஊழியர்கள் நிற்பதற்குக் காரணம் கலாச்சார ரீதியான தலையீட்டை தொழிற்சங்க இயக்கங்கள் செய்யத் தவறியதன் விளைவினாலும், ஆளும் வர்க்கம் அவர்களின் மனதை வெற்றி கொண்டதாலும்தான். ஜால்ரா அடிக்கும் சங்கத்திலிருந்து ஒரு ஊழியரை போராடும் சங்கத்தின் பக்கம் இழுக்க முதலில் அவன் மனதை வென்று அவனை உறுதிமிக்க முன்னணி ஊழியனாக மாற்ற வேண்டியுள்ளது. மனங்களை வெல்லும் போராட்டக் களத்தில் தொழிற்சங்க இயக்கங்களை காணமுடியவில்லை. தட்டிக் கேட்க ஆள் இல்லாத பேட்டை ரவுடியாக முதலாளி வர்க்கம் நம் மக்களின் மனங்களை பிக்பாக்கெட் அடித்து கொண்டு போகிறது. அன்பானவர்களே என்ற மதவாதிகளுக்கு ஆயிரமாயிரம் மக்கள் திரள்கிறார்கள் மக்களின் மனங்களை வெல்வதற்கான நடவடிக்கையை தொழிற்சங்க இயக்கங்கள உடனடியாக துவங்கியாகவேண்டும். அது எப்போதோ ஓய்வாக இருக்கும்போது அல்ல... அது இப்போதிலிருந்தே அன்றாட நடவடிக்கையாக மாற வேண்டும்.

மேற்கூறியவை அனைத்தும் சென்ற வாரம் அம்பத்தூரில் ஒரு தொழிற்சங்க கூட்டத்தில் ஒரு தொழிற்சங்கவாதி தொழிலாளர்கள் மத்தியில் பேசிய பேச்சில் முடிந்தவரை நான் உள்வாங்கி எழுதியது. அற்புதமான விதை (உரை) அது.

இந்த மாத, மனதை தைத்த வரிகள்

"சிட்டுக் குருவிகளை
பழக்குங்கள் – அவை
வானத்தில் வட்டமிடும்
வல்லூறுகளையும்
அடித்து வீழ்த்தும்!"

●

## அரசு ஊழியர் இதழ் பற்றிய அறிக்கை நமுனா (18ஆம்) பாடப் பிரிவு

| | |
|---|---|
| வெளியிடும் இடம் | : சென்னை -5 |
| வெளியிடும் காலம் | : மாத இதழ் |
| அச்சிடுபவர் | : மு.அன்ப ரசு |
| நாட்டினம் | : இந்தியர் |
| முகவரி | : சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ் எண். 19/1 - 21/2 கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, சென்னை-600002 |
| வெளியிடுபவர் | : மு.அன்பரசு |
| நாட்டினம் | : இந்தியர் |
| முகவரி | : 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை-600005 |
| ஆசிரியர் | : ஆ.செல்வம் |
| நாட்டினம் | : இந்தியர் |
| முகவரி | : 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை-600005 |

ஒரு சதவீதத்துக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் மேல் பங்குத்தொகை சங்கம், 46, தேரடித் தெரு அளித்துள்ளவர்கள் திருவல்லிக்கேணி சென்னை - 600 005

மு.அன்பரசு என்னும் நான் மேலே கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அறிந்தவரை உண்மையென்று இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

சென்னை

1.4.2023

கட்டுரை

# புதியகல்விக் கொள்கை புகுத்தும் அபாயங்கள்

**– இரா.மங்களபாண்டியன்**

காலந்தோறும் கல்விக்கொள்கை எவ்வாறு உருவாக்கப்பட்டது என உற்று கவனித்தோமானால்,அது ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் ஆளும் வர்க்கத்தின் பொருளாதாரக் கொள்கையின் பிரதிபலிப்பாகவே அமைந்திருப்பதைக் காணலாம்.

இந்தியாவில் ஆங்கில வழிக்கல்வியை திணித்த 1813 சாசனம், எண்ணத்திலும் அறிவாற்றலிலும் ஆங்கிலேய அடிமைகளை உருவாக்க முயன்ற மெக்காலே கல்விக் கொள்கை, இதற்கு ஏற்றார் போன்று போதனா முறையை உருவாக்கிய 1854 சார்லஸ் உட் நடவடிக்கை, தேர்வுகளைக் கண்டுபிடித்த 1882 ஹண்டர் கமிஷன், இத்தகைய குழுக்களின் பரிந்துரைகளோடு தான் அடிமை இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் செயல்பட்டது.

சுதந்திர இந்தியாவில் நேருவின் பொருளாதாரக் கொள்கைக்கு உகந்தார் போன்று கல்வியில் நவீனமயமாக்கலை முன்மொழிவதற்கு 1964ல் அப்போதைய பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் டாக்டர் டிஎஸ் கோத்தாரி தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இக்குழு இரண்டு ஆண்டுகள், 12 உண்மை அறியும் குழுக்கள், ஏழு செயல் அமைப்பு குழுக்கள் என இயங்கி 9000 பேரிடம் பலவாறு கருத்தறிந்து 2400 பக்க அறிக்கையை 1966 ஜூன் 29 அன்று சமர்ப்பித்தது. இதுவே கோத்தாரிக் கல்விக்குழு என அழைக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து 1986-ல் அன்றைய பிரதமர் ராஜீவ்காந்தி இந்திய நாட்டை நாசகரமாக்க புதிய பொருளாதாரக் கொள்கையை திணித்தார். இதற்கு ஏற்றார் போல் புதிய கல்விக் கொள்கையை காங்கிரஸ் அரசு அறிமுகப்படுத்தியது. இக்கல்விக் கொள்கைக்கு எதிராக நாடு முழுவதும் மாணவர்களும் ஆசிரியர்களும் சமூக அக்கறை கொண்ட இயக்கங்களும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தின. நாடே போர்க்கோலம் பூண்டதுபோல மாறியது. கல்வி வியாபாரமாக்கல் சட்டரீதியாக ஊக்குவிக்கப்பட்டது. இந்திய நாட்டின் கல்விச் சந்தையைக் கூறுபோட்டு, பன்னாட்டு முதலாளிகளுக்கு வியாபாரம் செய்ய சட்டரீதியான ஒப்பந்தங்கள் உருவெடுக்கத் தொடங்கின.

இதற்குப் பிறகும் பெருமுதலாளிகள் அம்பானி - பிர்லா குழும தொழில்நுட்ப ஆலோசகர் சாம் பிட்ரோடா தலைமையில் கல்வி கமிஷன் போடப்பட்டு கல்வி குறித்து அறிக்கைகள் பெறப்பட்டன.

மெக்காலே கல்விக்கொள்கை, ராஜீவ் காந்தியின் புதிய கல்விக் கொள்கை, பிர்லா அம்பானி குழு, சாம் பிட்ரோடா குழு என இதற்கு முன் அமைக்கப்பட்ட அனைத்து குழுக்களின் ஆலோசனைகளைக் கலந்து இன்றைய சந்தைப் பொருளாதாரத்திற்கு உகந்தார் போன்று ‘ஆர்எஸ்எஸ் ஆய்வகத்தில்’’ செய்த கலவைதான் டாக்டர் கஸ்தூரிரங்கன் தலைமையிலான குழு உருவாக்கிய புதிய கல்விக்கொள்கை.

2015இல் 6 முதல் 18 வயது உடைய 6.2 கோடி மாணவர்கள் பள்ளியை விட்டு நின்றுள்ளனர். இந்தக் குறைபாடுகளை நீக்கப் போவதாக பேசும் அறிக்கைதான் இன்னும் பல கோடி மாணவர்களை பள்ளியை விட்டு விரட்ட திட்டம் தீட்டியுள்ளது. தற்போதுள்ள 10+2 பள்ளிக்கல்வி முறை 5+3+3+4 என நான்கு கட்டங்களாக மாற்றப்படும். இதில் மூன்று, ஐந்து, எட்டாம் வகுப்புகளில்

பொதுத்தேர்வு நடத்தப்பட்டு தேர்ச்சி பெறும் மாணவர் மட்டுமே அடுத்தடுத்த வகுப்புகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்கிறது வரைவு கல்வி அறிக்கை. மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதை சொல்லி அரசுப் பள்ளிகளை மூடுவதை தடுக்கிறேன் என்ற பெயரில் புதிய வழிமுறையை இந்த அறிக்கை பேசுகிறது. அதாவது பள்ளிகளை குறு மையங்களா மாற்றுவது (cluster system)

பத்து மைல் தூரத்திலுள்ள அங்கன்வாடி முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள பள்ளிகள், தொகுப்புப் பள்ளிகளாகக் கருதப்படும். இத்தகைய முறை வளர்ந்த நாடுகளில் நடைமுறையில் உள்ளதுதான். அங்கு சுற்றுவட்டாரத்தில் இருக்கும் கல்வி நிலையங்களின் ஆற்றலை, திறமைகளைப் பகிர்ந்து கொள்வதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால் இங்கோ ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, கல்வி கொடுத்து வந்த அரசுப் பள்ளிகளை மாணவர், ஆசிரியர் எண்ணிக்கையைக் காரணம் காண்பித்து மூடுவதற்கு கண்டுபிடித்த திட்டம் இது.

எழுத்தறிவு பெற்ற சதவீதத்தை, பல நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியா 74.25 சதம்தான். இது அண்டை நாடான இலங்கையை விடக் குறைவு. இந்தக் குறைபாட்டை களைந்து இந்தியா முன்னேற ஒற்றைச் சொல்லைக் கூட இந்த அறிக்கை உதிர்க்கவில்லை.

இந்தியாவில் உயர்கல்வி பெறுவோரின் எண்ணிக்கையை 2030-ஆம் ஆண்டுக்குள் 50 சதமாக அதிகரிப்பது எனப் பேசுகிறது புதிய வரைவுக் கொள்கை. உயர் கல்வியை அடிப்படையிலேயே சிதைக்கக்கூடிய சீரழிக்கக்கூடிய கேடுகெட்ட திட்டங்களை கொண்டுள்ளது.

தற்போது உள்ள உயர்கல்வியின் பன்முகத் தன்மைகளை முழுமையாக மாற்றி, ஆராய்ச்சிப் பல்கலைக்கழகங்கள், கற்பிக்கும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் என மூன்றடுக்கு திட்டத்தை முன்மொழிந்து இருக்கிறார்கள். ஏற்கனவே தில்லி பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு இடையூறுகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் உள்ளான 4 வருட தாராள பட்டப்படிப்பை (liberal arts) அறிமுகப்படுத்தப் போவதாக அறிக்கை சொல்கிறது.

அரசுப் பல்கலைக்கழகங்களோடு இணைக்கப்பட்டுள்ள கல்லூரி முறையே முழுமையாக 2020க்குள் மாற்றியமைப்பது. 2020-க்கு பிறகு அனைத்துக் கல்லூரிகளும் தன்னாட்சி பெற்றவையாகவே செயல்பட வைப்பது. 2032 இல் ஒவ்வொரு கல்லூரியும் தானாகவே தேர்வு வைத்துப் பட்டம் கொடுக்கும் முறையை அமலாக்குவது என வரைவு அறிக்கை பட்டியலிடுகிறது.

ஆனால் இத்தகைய நடைமுறை வருவதற்கான அவசியம் ஏன் ஏற்பட்டது என அறிக்கை பேசவில்லை குறிப்பாக உயர்கல்வியில் தற்போதுள்ள சவால்களை எதிர்கொள்ள கல்வியாளர்களும் பல்வேறு அறிஞர்களையும் இந்தக் குழு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. மிக முக்கியமாக உலக வர்த்தக அமைப்பு மற்றும் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் இந்திய உயர்கல்வி எதிர்கொண்டு வரும் பிரச்சனைகள் குறித்து எதுவும் பேசாமல் மௌனம் சாதித்துள்ளனர்.

தேசியப் பெருமை, பண்பாடு குறித்து புளங்காகிதமடைந்து பக்கம் பக்கமாக எழுதியுள்ள வரைவுக் குழுவினர், அரசுப் பல்கலைக்கழகங்களோடு இணைந்து (affiliated system) செயல்படும் கல்விமுறையை மேம்படுத்துவதற்கு மாறாக, முழுமையாக ஒழித்துக் கட்ட திட்டம் தீட்டுவது ஏன்? குறிப்பாக இந்தியாவில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட தன்னாட்சி கல்வி முறை மிகப்பெரிய அளவில் கல்வித்துறையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாத போது, அது குறித்து முழுமையாகப் பரிசீலிக்காமல் ஒட்டு கல்லூரிக் கல்வியையும் தன்னாட்சியாக மாற்றுவது எப்படி அறிவுடைமையாகும்?

கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வர வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் போது அதை அப்படியே நிராகரித்து விட்டு அனைத்து அதிகாரங்களையும் மத்திய அரசின் கைக்குள் கொண்டு செல்லும் புதிய திட்டத்தை தீட்டி உள்ளனர்.

கல்விக்கான இலக்கை உருவாக்குவது. வெளிப்படுத்துவது, செயல்படுத்துவது, மதிப்பீடு செய்வது மற்றும் மறுசீரமைப்பு செய்யும் பொறுப்பு அனைத்தும் ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவரப்படும். அந்த அமைப்பின் பெயர் தேசிய கல்வி ஆணையம் (RSA). இதன் தலைவராக பிரதமர் செயல்படுவார். பல்வேறுபட்ட மொழிகளையும் கலாச்சாரங்களையும் வேறுபாடுகளையும் கொண்ட இந்திய நாட்டின் கல்வி முறையை ஒற்றைத் தலைமையின் கீழ் கொண்டு வர முயல்கின்றனர். இந்திய அரசியலமைப்புச் சட்டம், நாடாளுமன்ற ஜனநாயகம், மக்கள் நல அரசு போன்றவற்றின் மீது கட்டப்பட்டுள்ள இந்திய உயர் கல்வி முறையை முழுமையாக உடைத்தெறிந்து விட்டு ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்திற்கும் சந்தைப் பொருளாதாரத்திற்கும் உகந்த கட்டமைப்பை உயர்கல்வியில் உருவாக்கும் முயற்சியே இது.

தாய்மொழிவழிக் கல்வி நிராகரிப்பு. மும்மொழிக் கொள்கை திணிப்பு, சமூகநீதி அரசியலுக்கு அடிப்படையான இட ஒதுக்கீடு முறையை ஒழித்துக் கட்டுவது. பல்கலைக்கழகங்களின் செனட், சிண்டிகேட்களில் ஆசிரியர், மாணவர்கள் பிரதிநிதித்துவம் குறித்து ஏதும் பேசாதது, தனியார் பள்ளிகள், கல்லூரிகள் தாங்களாகவே கட்டணத்தை நிர்ணயித்துக் கொள்ள முழு அனுமதி, மாற்றுத் திறனாளிகள், மாற்றுபாலினத்தவர் கல்வி குறித்து சிந்தனை செலுத்தாதது என பல்வேறு குறைபாடுகளை பல்துறை சார்ந்தவர்கள் பட்டியிட்டுக் கொண்டே வருகின்றனர்.

புதிய கல்விக் கொள்கை உருவாக்க நியமிக்கப்பட்ட கஸ்தூரிரங்கன் குழுவே விவாதத்திற்கு உள்ளாக்கப்பட்டு இருக்கும்போது அந்தக் குழுவின் அறிக்கையில் நேர்மையை எதிர்பார்க்க முடியாது?

இந்தியாவில் உள்ள அனைத்தும் மாநில அரசுகளையும் கலந்தாலோசிக்காமல்: பரந்த அளவில் கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சமூகத்திடமிருந்து கருத்துக்களை ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளாமல் தன்னிச்சையாக முன்மொழியப்பட்டுள்ள வரைவுக் கல்விக் கொள்கையை முழுமையாக நிராகரிக்க வேண்டும். கஸ்தூரிரங்கன் தலைமையிலான குழு முன்மொழிந்துள்ள வரைவு தேசியக் கொள்கையை முழுமையாக நிராகரிப்போம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விழுமியங்களை பாதுகாக்கக்கூடிய, பலப்படுத்தக்கூடிய மாற்றுக் கல்வி முறைக்கான போராட்டத்தை முன்னெடுப்போம். ●

## “பஞ்ச்”

மொரப்பா



# அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களும் அரசு பள்ளி மாணவர்களே!

**- மு. அன்பரசு**

தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி நடத்தும் அரசு உதவி பெரும் பள்ளி மாணவர்கள் மற்றும் சிறுபான்மை மாணவர்களுக்கான உரிமை மீட்பு மாநாட்டில் கலந்துகொண்டு தொடக்க உரை ஆற்ற என்னை அழைத்திருப்பதற்கு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அரசு உதவி பெரும் பள்ளிகள் பற்றி பேசும்போது அவை தோன்றிய வரலாற்றைப் பார்த்தால் அது தனித்துவம் வாய்ந்த ஒன்று என்பது விளங்கும். அந்த நிகழ்வுகளை உங்களுடன் இங்கே பகிர்ந்து கொள்வது பொருத்தமானதாக இருக்கும் என்று எண்ணுகிறேன். குறிப்பிட்ட பிரிவினர் மட்டுமே பயன் பெற்று வந்த குருகுலக் கல்வியை ஒழித்துவிட்டு பொதுக் கல்வியை இந்தியாவில் ஜனநாயகப்படுத்தியது ஆங்கிலேய ஆட்சிதான். 1715-ல் சென்னையில் தொடங்கப்பட்ட செயின்ட் ஜார்ஜ் பள்ளி, 1762-ல் திருச்சியில் தொடங்கப்பட்ட பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளி, 1819-ல் நாகர்கோவிலில் தொடங்கப்பட்ட ஸ்காட் கிறிஸ்டியன் பள்ளி ஆகியவற்றை இதற்கான முன்னோடி உதாரணங்களாகச் சொல்லலாம்.

1826-ல்தான் சென்னை மாகாண ஆளுநர் சர் தாமஸ் மன்ரோ பொது போதனை வாரியத்தை அமைத்தார். இதுவே பள்ளிக் கல்வித் துறை உருவாகக் காரணமாக அமைந்தது. புதிய பள்ளிகளை உருவாக்குவது, ஏற்கெனவே உள்ள பள்ளிகளை வளர்த்தெடுப்பது என்ற இலக்கோடு நடந்த செயல்பாட்டுக்கு 1871-ல் புதிய அங்கீகாரம் கிடைத்தது. உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பள்ளிகள் தொடங்குவதற்கும், அதற்கான மானியத்தை அரசிடமிருந்து பெறுவதற்கும் வழிவகுக்கப்பட்டதுதான் அது. இந்தியாவில் பொதுப் பள்ளிகள் எனும் பார்வை இதற்குப் பின்னரே பரவலானது. தொடக்கக் காலத்தில் பள்ளிகள் தொடங்கப்பட்டதில் கிறிஸ்தவ மிஷனரிகளின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது. தொடர்ந்து விடுதலைப் போராட்டக் காலத்தில் எழுந்த தேசிய உணர்வின் காரணமாக இந்துக்களும் முஸ்லிம்களும் பள்ளிகளைத் தொடங்கினர். இதேபோல, தத்தமது சமூகங்களின் முன்னேற்றத்துக்காக வெவ்வேறு சமூகங்கள் சார்பில் பள்ளிகள் தொடங்கப்படுவதும் அடுத்த போக்காக உருவெடுத்தது. சிறிய அளவிலான கட்டணங்களைப் பெறுவது அல்லது எளியோருக்குக் கட்டணச் சலுகை வழங்குவது அல்லது கட்டணமே இல்லாமல் இயங்குவது என்று பல முறைகளில் இயங்கிய இத்தகு பள்ளிகள் அனைத்தும் கிட்டத்தட்ட இன்று அரசுப் பள்ளிகள் சேவையாற்றும் அதே எளியோருக்கே சேவை ஆற்றிவந்தன.

1911-ல் எஸ்எஸ்எல்சி பொதுத் தேர்வு முதன்முறையாக நடைபெற்றபோது நேரடி அரசுப் பள்ளி என்று எதுவுமே இல்லை; அனைத்தும் இப்படியான பள்ளிகளே. இப்படியான பள்ளிகள்தான் பிற்காலத்தில் நாம் அரசு உதவி பெறும் பள்ளிகள் என்று குறிப்பிடும் தொகுப்பில் பெருமளவில் இடம்பெற்றிருந்தன.

நம் ஆட்சியாளர்கள் இந்தப் பள்ளிகளின் முக்கியத்துவத்தைச் சரியாகவே உணர்ந்திருந்தனர். மக்களுக்குக் கல்வியறிவூட்டும் அரசின் மிக முக்கியக் கடமையைத் இவை தாமாக முன்வந்து வழங்கியதையும், தமது நிலத்தையும் உடைமைகளையும் பொதுக் கல்விக்காக பலர் அர்ப்பணித்ததையும் அங்கீகரிக்கும் விதமாகவே அரசு நிதி உதவி வழங்கும் அடிப்படை உருவானது. அதனாலேயே இந்தப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான ஊதியம் உள்ளிட்ட நிதியுதவியை வழங்கிய அரசு, அங்கு பயிலும் மாணவர்களையும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இணையாக நடத்தியது. அரசு அளிக்கும் மடிக்கணினி, மிதிவண்டி, புத்தகங்கள், உதவித்தொகை என அத்தனை சலுகைகளும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கும் அளிக்கப்பட்டு வந்தன. இப்படிப்பட்ட சூழலில் நீட் தேர்வில் 7.5% இடஒதுக்கீடானது அரசுப் பள்ளிகளோடு நிறுத்தப்பட்டுவிடக் கூடாது; அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதைப் பலரும் வலியுறுத்திவருவது நியாயமானது. இதேபோல் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் உயர் கல்வியில் தனி இட ஒதுக்கீடு நியாயமான கோரிக்கையாகும்.

இதேபோல் தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் அரசின் நலத்

திட்ட உதவிகளான உயர் கல்வியில் தனி இட ஒதுக்கீடு, கல்லூரிகளில் பயிலும் பெண் மாணவியருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய், காலை சிற்றுண்டி திட்டம், ஒன்றிய அரசு 1 முதல் 8ஆம் வகுப்புவரை பயிலும் சிறுபான்மை மாணவர்களுக்கு நிறுத்திய உதவித் தொகையை மீண்டும் வழங்கிட வலியுறுத்தி நடை பெறும் இந்த உரிமை மீட்பு மாநாடு இங்கே கூடியிருக்கும் கூட்டத்தை பார்க்கும் போது `இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?` என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது தோழர்களே.

தமிழ்நாடு முழுவதுமே அரசுப் பள்ளிகளைப் போலவே கடந்த காலங்களை ஒப்பிட்டால் அரசு உதவி பெறும் பள்ளிகளும் தங்களுடைய பழைய செல்வாக்கை இழந்திருக்கின்றன; தனியார் பள்ளிகள் மீதான மோகம் என்பது பெற்றோர்களுக்கு ஏற்பட்டுள்ளதற்கான காரணம் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெரும் பள்ளிகளில் கல்வித் தரம் குறைந்துவருகிறது என்பதாகும். மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், சமூகத்தின் செல்வாக்கு மிக்கவர்கள் தனியார் பள்ளிகளை நோக்கி நகர்ந்துவிடும்போது, அரசுப் பள்ளிகளைப் போலவே அரசு உதவி பெறும் பள்ளிகளும் எளிய குடும்பத்தார் குழந்தைகளே அதிகம் படிக்கும் பள்ளிகள் ஆகிவிடுகின்றன. மேலும், படிப்பில் முன்னிலையில் இருக்கும் மாணவர்களைத் தனியார் பள்ளிகள் ஈர்த்துவிடுவதால், அரசுப் பள்ளிகளைப் போலவே அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் பெருமளவில் அடுத்தடுத்த நிலை மாணவர்களே அதிகம் இருக்கின்றனர். பல தரப்பு மாணவர்களும் கலந்து பயிலும்போது ஏற்படும் கூட்டு முன்னேற்றத்தில் இது பெரிய சறுக்கல் ஆகிவிடுகிறது.இந்த சமச் சீரற்ற நிலைமை மிகவும் மோசமானது. "அரசுப்பள்ளி - அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களைச் சமமாக நடத்து" என்ற கோஷத்தை முன்னெடுப்பதக்காண நேரம் இதுதான். அதைத் தான் இந்தக் கணம் தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியும் தமிழ்நாடு மக்கள் ஒற்றுமை மேடையும் செய்து கொண்டிருக்கின்றன. ஊதியம், பணிப் பாதுகாப்பு உள்ளிட்ட ஆசிரியர் நலன் சார்ந்த கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடும் ஆசிரியர் அமைப்பாக நின்றுவிடாமல், வர்க்க நலனுக்காக குரல் கொடுக்கும் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, மாணவர்கள் நலன் கருதி, சமூக அக்கறையுடன், அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி மாநாடு நடத்துவது, நாம் வர்க்கமாக அணிதிரள எடுக்கப்படும் முயற்சிகளின் தொடர்ச்சிதான் என்பதை நாம் உணர வேண்டும். தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் இந்த முயற்சிக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு இதுபோன்ற முன்னெடுப்புகளுக்கு தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் உடன் நிற்கும் என்றும் இங்கே தெயர்விதுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். இத்தகைய முயற்சிகள் வலுப்பெற்று தமிழ்நாடு வர்க்கமாக அணித் திரண்டால்தான் நமது கல்வி, ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றைக் காத்திட முடியும். அரசு உதவிபெறும் பள்ளிகளை அழித்தொழித்து, அரசுப் பள்ளிகளைப் பலவீனப்படுத்தி, இறுதியாக வணிகச் சந்தையிடம் கல்வியை முழுமையாக ஒப்படைக்கும் சூழ்ச்சியான தேசியக் கல்விக் கொள்கை 2020ஐயும் நாம் முழு வீச்சில் எதிர்க்கவேண்டும். அதன் முக்கிய கூறுதான் "நீட்", "கியூட்" மற்றும் அன்னியப் பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் கிளை திறக்க அனுமதிப்பது. இது நமது ஜனநாயகத்தைச் சீரழித்து, சுதந்திரத்தை இழக்கச் செய்யும் சூழ்ச்சியை செய்வதை நாம் உணர வேண்டும். உழைக்கும் வர்க்கமாக தமிழ்நாடு அணிதிரள வேண்டும் என்ற முயற்சி பல ஆண்டுகளாக நடந்து வந்துள்ளது. தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி இன்று அதற்கு ஒரு வடிவம் தந்துள்ளது.

கணவனை பறித்ததாலே
கண்ணகி சீற்றம் நியாயம்;
துணியினைப் பறித்ததாலே
திரௌபதி சபதம் நியாயம்;
மனைவியை இழந்ததாலே
ராமனின் யுத்தம் நியாயம்
உரிமைகளை இழப்பதாலே எங்களின்
ஆவேசம் நியாயம்! நியாயம்!

இந்த திருச்சி மாநகரம் என்றும் திருப்புமுனைக்கு பெயர் பெற்றதாகும். "மாணவர்களைச் சமமாக நடத்து" என்ற முழக்கத்தை உருவாகியிருக்கும் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநாடு நிச்சயம் வெல்லும்! நாளைய வரலாறு அதைச் சொல்லும்! ●

# அகில இந்திய விவசாயிகள் – விவசாய தொழிலாளர்கள் – சிஐடியு மக்களை அணி திரட்டி நடத்தும் தில்லி பேரணி!

தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத, தேச விரோத நவீன தாராள மயப் பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடித்துவரும் மோடி தலைமை யிலான அரசாங்கத்தை அப்புறப்படுத்திட, வரும் 2023 ஏப்ரல் 5 அன்று சிஐடியு, அகில இந்திய விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மாபெரும் தொழிலாளர்-விவசாயிகள்-விவசாயத் தொழிலாளர்களின் பேரணியை வரும் ஏப்ரல் 5 அன்று தில்லியில் நடத்திட தொழிலாளர்-விவசாயிகள் அதிகார் மகா திவேஷன் அமைப்பு தீர்மானத்துள்ளது. இந்தப் பேரணியானது நாட்டின் வளத்தை உருவாக்கும் சக்திகளாக விளங்கும் தொழிலாளர்கள்-விவசாயிகள்-விவசாயத்தொழிலாளர்கள், தற்போது அந்நிய மற்றும் உள் நாட்டுப் பெரும் கார்ப்பரேட்டுகளுக்கு சேவகம் செய்து வரும் ஆட்சியாளர்களின் கொள்கைகளை மாற்றியமைப்பதற்காக, மிகப் பெருந்திரளான விதத்தில் மக்களை அணிதிரட்டி, பேரணியை நடத்திட முடிவு செய்துள்ளது.

கார்ப்பரேட்டுகள்-இந்துத்துவா மத வெறியர்களின் கள்ளப் பிணைப்பை முறியடித்திட உழைக்கும் மக்களின் ஒற்று மையை மேலும் வலுவாக உயர்த்திப் பிடித்திட வேண்டும். நாட்டின் தொழிலாளர்களை மீண்டும் காலனிய அடிமைத்தனத்திற்குத் தள்ளுவ தற்கு அனுமதித்திடக் கூடாது. நாட்டின் சொத்துக்களை பேராசை பிடித்த கார்ப்பரேட்டுகள் கபளீகரம் செய்திட உழைக்கும் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்று நாட்டின் ஆளும் வர்க்கங்களுக்கு உழைக்கும் மக்கள் எச்சரிக்கை விடுக்கிறார்கள். இந்த நாட்டின் மக்கள் உணவுக்காகப் போராடிக் கொண்டிருந்த போதிலும், இந்த நாட்டின் வளங்களை தங்களின் ரத்தத் தாலும் வியர்வையாலும் உருவாக்கியவர்கள் இந்த நாட்டின் தொழிலாளர்-விவசாய வர்க்கமே என்பதையும், மாறாக லாபவெறி கொண்ட பணக்கார முதலைகள் அல்ல. நாளும் அதிகரிக்கும் விலைவாசி, வேலை இழப்புகள், வேலையின்மை, மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கும் வேலை நிலைமைகள் மற்றும் வாழ்வாதார நிலைமைகள், நாட்டின் சொத்துக்கள் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டு வருதல், கல்வி, சுகாதாரம் மற்றும் பலவிதமான சேவைப் பணிகள் வணிகமயமாகி வருதல், நாட்டின் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஏகபோக பன்னாட்டு நிறுவனங்களின் தயவில் வாழக்கூடிய நிலைக்குத் தூக்கி எறிந்திருத்தல், வேலையிடங்களில் ஜனநாயக மற்றும் உரிமை கள் மீது தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல் கள், அரசமைப்புச்சட்ட மற்றும் நாடாளுமன்ற நடைமுறை விதிகள் மீறப்பட்டிருத்தல், சிறுபான்மையினர், தலித்துகள், பழங்குடியினர் மற்றும் பெண்கள் மீது கொடூரமானமுறையில் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டிருத்தல் போன்ற உழைக்கும் மக்களின் எரிகிற பிரச்சனைகளை எதிரொலித்திடும்.

**இந்தப் பேரணியில் வைக்கப்படவுள்ள கோரிக்கைகள்:**

1. தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச ஊதியம் மாதத்திற்கு 26

ஆயிரம் ரூபாய் நிர்ணயம் செய்திட வேண்டும், ஓய்வூதியம் 10 ஆயிரம் ரூபாய் நிர்ணயம் செய்திட வேண்டும். ஒப்பந்த முறை ரத்து செய்யப்பட வேண்டும். ராணுவத்தில் அக்னிபாதைத் திட்டம் ரத்து செய்யப்பட வேண்டும்.

II. வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் ஆணையம் பரிந்துரைத்துள்ளபடி அனைத்து வேளாண் பொருள்க ளுக்கும் உற்பத்திச் செலவினம் மற்றும் 50 விழுக்காடு உயர்வுடன் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்திட வேண்டும்.

III. ஏழைகள், நடுத்தர விவசாயிகள் அனை வருக்கும் ஒரு தடவை கடன் தள்ளுபடி செய்திட வேண்டும். 60 வயது நிறைந்த விவ சாயத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் அளித்திட வேண்டும்.

IV. தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் (Labour Codes) எனப்படும் தொழிலா ளர்களுக்குக் கேடு பயக்கும் சட்டங்க ளை ரத்து செய்திட வேண்டும். மின்சாரத் திருத்தச் சட்டத்தை ரத்து செய்திட வேண்டும்.

V. அனைவருக்கும் பணிப் பாதுகாப்பு அளித்திட வேண்டும், உத்தரவாதம் அளித்திட வேண்டும். D மகாத்மாகாந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆண்டுக்குக் குறைந்தபட்சம் 200 நாட்க ளுக்கு வேலை அளித்திட வேண்டும், குறைந்தபட்ச ஊதியம் நாளொன்றுக்கு 600 ரூபாய் அளித்திட வேண்டும். நிலு வைத்தொகைகளை உடனடியாக அளித்திட வேண்டும். நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் உருவாக்கி அமல் படுத்திட வேண்டும்.

VI. பொதுத்துறை நிறுவனங்களைத் தனி யாருக்குத் தாரை வார்ப்பதை நிறுத்திட வேண்டும். பொதுத்துறை நிறுவனங்க ளை விற்று பணமாக்கும் (National Monetisation Pipeline)முறையை கிழித்தெறிந்திட வேண்டும்.

VII. விலைவாசியைக் கட்டுப்படுத்திட வேண்டும். ‘உணவுப் பொருள்கள் மீதான ஜிஎஸ்டி-வசூலைத் திரும்பப் பெற வேண்டும். பெட்ரோல்/டீசல்/மண் ணெண்ணெய்/சமையல்எரிவாயு முத லானவற்றின்மீதான கலால் வரிகளைக் குறைத்திட வேண்டும்.

VIII. பொது விநியோக முறையை நாடு முழுவதற்கும் விரிவுபடுத்திட வேண் டும். இதன்கீழ் 14 அத்தியாவசிய உண வுப் பொருள்களை வழங்கிடவேண்டும்.

IX. வருமான வருமானவரி செலுத்தாத குடும்பத்தி னருக்கு உணவு மற்றும் வருமா னத்திற்கு உத்தரவாதம் அளித்திட வேண்டும்.

X. வன உரிமைகள் சட்டத்தைக் கறாராக அமல்படுத்த வேண்டும். வனவாசி களை வெளியேற்றக்கூடிய விதத்தில் கொண்டுவரப்பட்டுள்ள வன(பாது காப்பு) சட்டம் மற்றும் விதிகளில் கொண்டுவந்துள்ள திருத்தங்களை விலக்கிக்கொள்ள வேண்டும்.

XI. விளிம்பு நிலை மக்களை ஒடுக்குவதை நிறுத்த வேண்டும், சமூக நீதியை உத்தரவா தப்படுத்திட வேண்டும். D அனைவருக்கும் சுகாதார வசதிகள், கல்வி வசதிகளை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

XII. புதிய கல்விக் கொள்கையை கைவிட வேண்டும். D அனைவருக்கும் வீட்டு வசதி அளித்திட வேண்டும்.

XIII. பெரும் பணக்காரர்களுக்கு வரி விதித் திட வேண்டும். கார்ப்பரேட் வரியை உயர்த்திட வேண்டும்.

செல்வ வரியை அறிமுகப்படுத்திட வேண்டும். ●

# அவுட் சோர்சிங்கிற்கு ஆதரவு கேட்கும் நிதியமைச்சர்

*அரசு ஊழியர்கள் லாபம் சம்பாதித்து தரும் இயந்திரங்கள் அல்ல, அரசின் சேவகர்கள் மக்கள் நலன்களையும் அரசின் திட்டங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் அரசு ஊழியர்களை கௌரவமாக நடத்துங்கள்! கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் முதல்வரே!*

*அரசுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வேண்டுகோள்!*

நேற்று (26.03.2023) சட்டப்பேரவையில் பேசிய நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.பழனிவேல் தியாகராஜன் அவர்கள், அவுட்சோர்சிங் முறையில் அரசு வேலைகளில் ஆட்களை நியமிக்க அரசாணை வெளியிட்டபோது பலரும் எதிர்த்தாகவும், அரசாங்கத்தில் வேலை செய்கிற தற்காலிகப் பணியாளர்களுக்கெல்லாம் ஒரு மினிமம் ஆவது கொடுக்க வேண்டும் என்பதால் அவுட்சோர்சிங் முறையை கொண்டுவந்ததாகவும், அரசாங்கத்தில் சில பேர் ரூ.5000/-, ரூ.10,000/- வாங்கிக் கொண்டு வேலை செய்து கொண்டிருப்பதாகவும் முழுநேரப் பணியாளர்கள் அதாவது நிரந்தரப் பணியாளர்கள் இலட்சம் ரூபாய் வாங்குவதாகவும் இது நியாயமில்லை என்று கூறியதோடு நில்லாமல் அவுட்சோர்சிங் பணியில் ஒரு ஸ்டாண்டர்ட் ஊதியம் போட்டு அவர்களை இபிஎப், இஎஸ்ஐ-ல் சேர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த அரசாணையைக் கொண்டுவந்ததாகவும் அதை சமூக நீதிக்கு எதிராக செய்கிறீர்கள் என்று எதிர்கட்சிகள் கூட கூறுவதாகவும் தமிழ்நாட்டை எல்லாவகையிலும் சீர் திருத்துவதற்காக அவரும் முதலமைச்சரும் முதல் ஆளாக நிற்பதாகவும் இந்த மாநிலத்தின் நலனுக்காக, அரசாங்கத்தின் எதிர்காலத்திற்காக இந்த முயற்சிகளை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்றும் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

கடந்த ஆட்சியில் முதல்வராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஐந்தாம் கிளாஸுக்கு பாடம் நடத்துகிற வாத்தியானுக்கு ரூ.82,000/- சம்பளம், என்ன அநியாயம் என்று பேசியதை அப்போதைய எதிர்கட்சித் தலைவராக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆசிரியர் அரசு ஊழியர்களை எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் கொச்சைபடுத்தி பேசுகிறார் என்று கண்டனம் தெரிவித்தார். அன்றாவது எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஒரு கூட்டத்தில்தான் அந்தக் கருத்தை தெரிவித்திருந்தார். ஆனால் இன்று சட்டசபைக்குள், தன் முன்னிலையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை கொச்சைபடுத்துகின்ற வார்த்தைகளை நிதியமைச்சர் பேசும்போது அதை முதல்வர் இரசித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஓட்டு கேட்கும்போது ஒரு பேச்சு, முதல்வராகிவிட்டபிறகு வேறு போக்கு என்பதை அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் பொதுமக்களும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

இன்று தமிழ்நாட்டில் அரசுத்துறைகளில் ஆறு லட்சம் பணியிடங்கள் காலியாக விடப்பட்டுள்ளன. ஆறு லட்சம் இளைஞர்களின் வேலைவாய்ப்புக் கனவுகளை இந்த அரசு முடக்கி வைத்துள்ளது. அதை சரி செய்யாமல் அவுட்சோர்சிங்கில் ஆள் எடுப்பதுதான் சமூகநீதி என்கிறார் மாண்புமிகு நிதியமைச்சர். ஒரு கார்ப்பரேட் முதலாளிக்கு நிர்வாகத்தை குத்தகைக்கு விட்டுவிட்டு இந்த நாட்டின் இளைஞர்களை அத்துக்கூலிகளாக்குவது தான் நிதியமைச்சருக்கும், முதலமைச்சருக்கும் சமூகநீதியாக தெரிகிறது போலும். நிதியமைச்சர் அவர்களே நீங்கள் பேசும் பேச்சை தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அனைவரும் உற்றுக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வருங்கால இளைஞர்களை கொத்தடிமைகளாக, அரசாங்கங்களே மாற்றுவதற்கான ஏற்பாடே அரசுத்துறைகளில் அவுட்சோர்சிங் முறைகளை புகுத்துவதும் அரசுத்துறைகளை தனியார் வசம் ஒப்படைப்பதுவும் ஆகும். இது இந்த நாட்டின் படித்த இளைஞர்களை சொந்த நாட்டிலேயே அடிமைகளாகவும் அகதிகளாகவும் மாற்றும் சூழலை ஏற்படுத்தி விடும். அதைத்தான் சமூகநீதி என்கிறார் நிதியமைச்சர். சென்ற தேர்தலில் திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவில் ஒரு உறுப்பினராக இருந்தவர்தான் நமது நிதியமைச்சர். தேர்தல் அறிக்கையில் திமுக ஆட்சிக்கு வந்தால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பிரச்னைகள்

அத்தனையும் தீர்த்து வைக்கப்படும் என்று முடிவெடுத்தபோது இந்த நிதியமைச்சர் என்ன செய்து கொண்டிருந்தார். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் பழைய பென்சன் திட்டம் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும் என்று திமுக தேர்தல் அறிக்கையில் கூறியதும் கூட்டத்திற்கு கூட்டம் முதல்வர் அதை முழங்கியதும் வெறும் வாய்ஜாலங்களா? அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை ஏமாற்றி ஓட்டு வாங்க நடத்தப்பட்ட நாடகங்களா? திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவில் இருந்த திரு. பழனிவேல் தியாகராஜன் தேர்தல் அறிக்கை தயாரிக்கும்போதும், பழைய பென்சன் திட்டம் பற்றி முதல்வர் கூட்டங்களில் பேசும்போதும் மௌனகுருவாக இருந்துவிட்டு சென்ற ஆண்டு பட்ஜெட் உரையில் பழைய பென்சன் திட்டத்திற்கு சாத்தியமேயில்லை என்று தெரிவித்ததும், இப்போது அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட பட்ஜெட் உரையில் பேசாததும்தான் திராவிட மாடல் ஆட்சியோ?

காரில் ஏறிப்போய் கான்வெண்ட் பள்ளியில் படித்துவிட்டு, வெளிநாட்டில் பொருளாதாரம் படித்து விட்டு கார்ப்பரேட் கம்பெனியில் வேலை செய்து விட்டு இன்று நிதியமைச்சராக ஆகியுள்ள திரு.பழனிவேல் தியாகராஜன் அவர்களின் சமூகநீதி என்பது கார்ப்பரேட் மாடல்களில் லாப நோக்கில் இல்லாமல் மக்கள் நலனுக்காகவா இருக்கும்?

ஆட்சிக்கு எதிரான விமர்சனங்கள், ஆட்சிக்கு எதிரான கோபங்கள் இவற்றால் எழும் ஆபத்துகளை விட அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எதிரான மனோ நிலையை இந்த அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டே இருப்பதனால் ஏற்படும் விளைவுகள் அனைத்தும் நாளை, முதலமைச்சர் அவர்களின் தலையில்தான் விடியும் என்பதை அவரை தவறாக வழிநடத்தும் அமைச்சர்களும் அதிகாரிகளும் உணர்ந்து கொண்டால் அது இந்த அரசாங்கத்திற்கு நல்லது. இல்லாவிட்டால் ஏற்கெனவே துாக்கமில்லாத இரவுகளை கழித்துவரும் நமது முதல்வர் எதிர்வரும் தேர்தல்களில் துக்கமான இரவுகளையும் கழிக்க நேரிடும். அரசு ஊழியர்களை ஆசிரியர்களை கௌரவமாக நடத்துவதிலிருந்து விலகி அவர்களை கொச்சைபடுத்தியும், இழிவுபடுத்தியும் பார்த்த அரசாங்கங்களுக்கு நேர்ந்த நிலைமைகளை நாங்கள் மீண்டும் மீண்டும் சொல்லிப் புரிய வைக்கத் தேவையில்லை. நிதியில்லை, சமூகநீதியில்லை என்று கூறுவதெல்லாம் நீங்கள் தேர்தல் வாக்குறுதி கொடுத்தீர்களே அப்போது உங்கள் அறிவில் எட்டியிருக்க வேண்டும் மாண்புமிகு நிதியமைச்சரே. எங்களது முதல்வர் தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளைத்தான் கேட்கிறோம். எங்களுக்கான உரிமைகளைத்தான் கேட்கிறோம். சட்டத்தில் இல்லாததையோ, மற்றவர்களுக்கு தர வேண்டியதையோ நாங்கள் எங்களுக்கு பறித்துக் கொடுங்கள் என்று கூறவில்லை. ஒரு முன்னாள் கார்ப்பரேட் நிறுவன அதிகாரியிடம் சமூகநீதி கோட்பாடு பற்றி கேட்டால் என்ன சொல்வாரோ அதைத்தான் நிதியமைச்சரும் சொல்லியிருக்கிறார். இந்த நிதியமைச்சருக்கு மக்களின் நலன் குறித்தோ, மனித வளம் குறித்தோ கடந்த 70 ஆண்டுகளாக திராவிட அரசாங்கங்கள் செய்துகாட்டியதை புரிய வைப்பது கடினமே.

கிட்டத்தட்ட ஐந்தாண்டுகளாக சரண்விடுப்பையும், மூன்று தவணைகளாக அகவிலைப்படியை காலம் தாழ்த்தியும், சில ஆண்டுகளாக அரசுத்துறைகளில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்காமல் ஆறு லட்சம் பணியிடங்களை காலியாக விட்டுவிட்டு அதன்மூலம் மிச்சப்படுத்தப்பட்ட நிதிகளைக் கொண்டு பற்றாக்குறையை பாதியாக குறைத்துவிட்டதாக தம்பட்டம் அடித்துக் கொள்வதற்கு பெயர் சாதனை அல்ல நிதியமைச்சரே தமிழக மக்களுக்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் சோதனை. மக்கள் நலன், வேலை வாய்ப்பு, சமூக நீதி, பெண்களுக்கான பாதுகாப்பு போன்றவை இல்லாத மனிதவளம் என்பது முதல்வரின் வாக்குறுதிகளைப் போல, திமுகவின் தேர்தல் அறிக்கையைப் போல வெறும் கட்டுக்கதையாகத்தான் இருக்கும்.

மனிதவளம் என்பது மக்களை வறுமையில் தள்ளியும், வேலைவாய்ப்பற்று இருக்க வைத்தும், அத்துக்கூலி அவுட்சோர்சிங் முறையை அமல்படுத்தியும் நிகழ்வதல்ல என்பதை நிதியமைச்சரும் நிதியமைச்சரை மலைபோல் நம்பியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் புரிந்துகொண்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் உரிமைகளை செலவாக பார்க்கின்ற மனோநிலையிலிருந்து மாறிக்கொள்ளுங்கள் என்று மாண்புமிகு முதல்வரிடமும் அமைச்சர் பெருமக்களிடமும் கேட்டுக் கொள்கிறோம். ●

# போர்க்களம் கண்ட அரசு ஊழியர் போராட்டம், ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் !

அரசு ஊழியர்களின் இடைவிடாத போராட்டங்கள் இருபதாவது ஆண்டை எட்டியுள்ளது. 2003ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதலாவதாக தமிழகத்தில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்த செல்வி ஜெயலலிதா முதற்கொண்டு அதன்பிறகு ஆட்சியமைத்த கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் அவரது ஆட்சியைத் தொடர்ந்த எடப்பாடி பழனிச்சாமி, சென்ற தேர்தலில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நம்பிக்கைகுரிய தோழனாக தோள்நின்று உங்களுக்கானதை நான் ஆட்சிக்கு வந்ததும் உடனே செய்வேன் என்ற வாக்குறுதியை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மேடைகளிலும், ஜாக்டோ ஜியோ மாநாடுகளிலும் ஏறி நின்று உரத்துக் கூறிய இன்றைய முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் ஆகியோர் வரை எல்லோரும் 2006 சட்டமன்றத்தேர்தல் முதற்கொண்டு 2021 தேர்தல் வரை நயவஞ்சக நாடகம் நடத்தி வருகிறார்கள். 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசு ஊழியர்களுக்கான அனைத்து உரிமைகளையும் மீளப்பெற நடவடிக்கை எடுப்போம்.' என்ற நயவஞ்சகம் இன்றும் தொடர்கிறது. இந்த விஷயத்தை 'அரசு ஊழியர் –எதிர் ஆட்சியாளர்கள்' என்பதிலிருந்து 'அரசு ஊழியர் -எதிர்- அரசியல்வாதிகள்' என்று பார்க்க வேண்டிய அனுபவத்தை அரசு ஊழியர்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 20 ஆண்டுகள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் போன்றோருக்கு மிகவும் இக்கட்டான சூழலை ஏற்படுத்தியுள்ள காலமாக அமைந்திருப்பதை அரசு அதிகாரிகள் மட்டுமல்ல, அதிகாரத்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல ஆட்சியாளர்களும் கூட அறிந்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களின் ஊதியங்களை நிர்ணயம் செய்வதில் மிகப்பெரிய முரண்பாடுகள் ஏற்பட்டு அவற்றை களைவதற்கான முயற்சிகளை மனுக்கள், கோரிக்கைகள், பிரதிநிதித்துவங்கள், கவன ஈர்ப்பு ஆர்ப்பார்ட்டங்கள், கண்டனத் தீர்மானங்கள், உண்ணாநிலைப் போராட்டங்கள், முற்றுகைப் போராட்டங்கள் என அனைத்துவிதமான போராட்டங்களை கடந்த பதினைந்து ஆண்டுகளாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். ஆனால் அவர்களது கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு நேரடிப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்க முன்வராமல் ஐஏஎஸ் அதிகாரிகள் தலைமையில் குழுக்கள் அமைத்து அவர்கள் மூலம் நமது பிரதிநிதித்துவங்களைப் பெற்று அவற்றை பரிசீலிப்பதுபோன்ற பாவனைகளை ஏற்படுத்தி ஊதிய முரண்பாடுகளை மேலும் சிக்கலாக்கியதுடன் மிகுந்த காலவிரயங்களையும் ஏற்படுத்தினர். கடந்த பதினைந்து ஆண்டுகளில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை களைவதற்காக அமைக்கப்பட்ட குழுக்கள் எதுவும் அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை கவனத்தில் கொள்ளாமலேயே தங்களின் விருப்பப்படி சமச்சீரற்ற ஊதிய மாற்றங்களை ஏற்படுத்தி மீண்டும் மீண்டும் அவர்களை போராட்ட களங்களுக்கு தள்ளியுள்ளன.

இந்தியாவில் பிற மாநிலங்களில் அரசுத்துறைகளில், அரசுப்பள்ளிகளில் பணிபுரியும் அரசுஊழியர்கள், ஆசிரியர்கள் பணியாளர்கள் துய்க்கின்ற உரிமைகளைத்தான் தமிழக அரசிடம் அரசு ஊழியர்கள் கோருகின்றனர். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் தமிழகத்தில் உள்ள அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் என அறிவித்துவிட்டு, அடிப்படை சம்பளம் தவிர்த்து மற்ற அம்சங்களில் மிகுந்த பாகுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதைப்போலவே ஊதிய மாற்றங்களில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை சரிசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையை 2006ல் எற்படுத்தப்பட்ட ஊதிய மாற்றத்திலிருந்தே தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு

வருகிறது. சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரிபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என அரசு அறிவித்தது அது பல ஆண்டுகளாக கிடப்பில் உள்ளது. புதிய ஓய்வூதியத் திட்டம் திரும்பப் பெறப்படும் என 2011 தேர்தல் அறிக்கையிலேயே உத்தரவாதம் வழங்கி ஆட்சிக்கு வந்த அதிமுக அதன்பின் நான்கு ஆண்டுகளாக மௌனம் காத்தது. அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்டங்களை முன்னெடுத்த பின்னர் வல்லுநர் குழு அமைத்து மூன்று ஆண்டுகளாக அதன் காலம் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருவதுமான போலி நாடகங்களும் சொல்லி நிறைவேற்றிடத் தவறிய வாக்குறுதிகளும்தான் அரசு ஊழியர்களை போராட்டக் களத்திற்கு இழுத்து வந்துள்ளது.

இந்திய ஜனநாயகத்தில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள் அரசின் பொக்கிஷங்களாகக் கருதப்பட்ட நிலைமாறி அவர்களெல்லாம் இப்போது தலைகீழாகத் தொங்கவிடப்பட்டுள்ளனர். அரசின் திட்டங்களை செயல்படுத்துவதிலும் மக்களுக்கான சேவைகளை அரசின் திட்டங்களை கடைசி பொதுஜனம் வரை கொண்டு சேர்ப்பதிலும் அரசு ஊழியர்களின் பங்கு மகத்தானதாக இருந்ததால் அவர்கள் அரசாங்கத்தின் அம்பாசிடர்களாக மக்களால் பார்க்கப்பட்டனர். ஆனால் இன்றைய நிலையில் மக்களுக்கான திட்டங்களையும், சேவைகளையும் அரசாங்கங்கள் நிறுத்திக்கொள்ள முடிவு செய்துவிட்ட நிலையில் எந்த அரசாங்கமும் அரசு ஊழியர்களைப் பற்றி பெரிதாக கவலைப்படாமல் இருக்கிறார்கள்.

மக்களுக்கான திட்டங்களும் வெறும் அறிவிப்புகளாகவும், விளம்பரங்களாகவும், அதை அறிவித்ததே அரசாங்கத்தின் சாதனைகளாகவும் மிகைப்படுத்தப்பட்டு முதல்பக்க விளம்பரங்களாக வருகின்றன. சமதர்ம சமுதாயம், சமூகநீதி ராஜாங்கம், மக்கள் நல அரசாங்கம் என்றெல்லாம் தேர்தலுக்கு முன்பு பேசிவிட்டு வந்த ஒரு கட்சிதான் தனியார்மயத்தின் மீது தணியாத மோகம் கொண்டு அவுட்சோர்சிங் முறைக்கு அரசாணை வெளியிடுகிறது. சர்வாதிகாரம் தன் உண்மை முகத்தை காட்டத் துவங்கியுள்ளதன் அடையாளம்தான் இது. பதவியேற்று இரண்டு ஆண்டுகள் முடியும் தருவாயில் உள்ள நிலையிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் தேர்தலுக்கு முன்பு அரசு ஊழியர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட இதுவரை நிறைவேற்றவில்லை என்பது ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் மட்டத்தில் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. பட்ஜெட் உரையில் அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்கான கடன் வரம்பை ரூ.40 லட்சத்திலிருந்து ரூ.50 லட்சமாக உயர்த்தி வெளியிட்டுள்ள அறிவிப்பானது, இன்றைய பொருளாதார சூழலில் வாழ்வாதாரம், பிள்ளைகளின் படிப்பு, பெண்ணின் திருமணம், மருத்துவச் செலவு போன்றவற்றிற்காக தத்தளிக்கும் அரசு ஊழியர்களைப் பார்த்து கேலி பேசுவதாக உள்ளது. வீட்டை அடைமானம் வைக்கலாமா அல்லது விற்றுவிடலாமா என்று விழிபிதுங்கி நிற்கும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வீடுகட்டும் கடனை ரூ.10லட்சம் உயர்த்தியிருப்பது உயர்ந்தபட்ச நகை முரணாகும்.

அரசுத்துறைகளில் எந்த ஒரு பணியும் திட்டமிடுவதிலிருந்து செயலாக்கம் பெறுவது வரை அமைச்சுப் பணியையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அரசு அறிவிக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள அறிவியல் ரீதியான அளவீடுகளின் அடிப்படையில் அமைச்சுப் பணிப்பிரிவின் கீழ் புதிய பணியிடங்கள் உருவாகக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். ஓய்வு, பணித்துறப்பு, இறப்பு மற்றும் பதவி உயர்வுகளால் காலியான பணியிடங்கள் நிரப்பப்படாததாலும், அரசின் பல்வேறு துறைகளிலும் உள்ள அமைச்சுப் பணியாளர்கள் கடுமையான பணிப்பளுவை சுமந்துகொண்டு அல்லல்பட்டு வருவதாலும், சட்டப்படி தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளை தராமல் நிறுத்திவிட்ட நிகழ்வுகளாலும் ஆட்குறைப்பு, பணியிடக்குறைப்பு, வேலைப்பளு அதிகரிப்பு

போன்ற காரணங்களினாலும் அரசு ஊழியர்கள், இருக்கின்ற சில மக்கள்நலத் திட்டங்களையும் முழுமையாக நிறைவேற்றிட முடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலைமைகளை மாற்றிடவே அரசு ஊழியர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கிறார்கள். இப்போது இந்தப் போராட்டங்கள் புரட்சியாக வெடித்துக் கிளம்ப வேண்டிய கால வளையத்திற்குள் வந்திருக்கிறது. இருபது வருட கோரிக்கைகள் இன்னும் கிடப்பிலேயே உள்ளன.

தற்போது நான்கு மாநிலங்கள் புதிய ஓய்வூதியத் திட்டத்தினை திரும்பப் பெற நடவடிக்கை எடுத்துவிட்ட நிலையில் சென்ற பட்ஜெட்டில் தமிழ்நாடு அரசு பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வருவதற்கு சாத்தியமேயில்லை என தெரிவித்திருந்த நிதியமைச்சர் இந்தமுறை அதைப் பற்றி ஒரு வார்த்தைக்கூட பேசாதது அரசு ஊழியர்களின் முழு நம்பிக்கையாளனாக இருக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசாங்கம் அரசு ஊழியர்களின் முதுகில் குத்தியிருப்பதாகவே அரசு ஊழியர்கள் பார்க்கிறார்கள்.

உறுதியளித்தபடி சத்துணவு ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்காமல் உள்ளது, சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக்கப்படாமல் உள்ளது, சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிவரன்முறை செய்து 41 மாத ஊதிய இழப்பை வழங்கிட வைக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்படாமல் உள்ளது போன்ற நிலுவை கோரிக்கைகள் அரசு ஊழியர்களை கொந்தளிப்பில் ஆழ்த்தியுள்ளது. ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வை தாமதிக்காமல் உடனே மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவதே உண்மையான சமூக நீதி. அதேபோல சரண்விடுப்பு ஒப்புவிப்பு மறுஉத்தரவு வரும்வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது அரசு ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி. இவை போக 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை உடனே வழங்குதல், தனியார்மய அரசாணைகளை இரத்து செய்தல், அரசுத்துறையில் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிட வேண்டும், தமிழக அரசுத்துறைகளில் காலியாக உள்ள ஆறு லட்சம் பணியிடங்களை உடனே நிரப்பிட வேண்டும் போன்ற கோரிக்கைகளும் தொடர்ந்து புறந்தள்ளப்பட்டு வருவது அரசு ஊழியர்கள் சிந்தனையில் மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதை முதல்வரும் அவருடைய அரசும் புரிந்து கொள்ளத் தவறினால் அதற்கான இழப்புகளை இந்த அரசாங்கம் அனுபவிக்க வேண்டிய சூழல் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு, துறைவாரி சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தற்போதைய தமிழ்நாடு அரசின்மீதும், குறிப்பாக மாண்புமிகு முதல்வரின் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் உடைந்து சுக்குநூறாகி உள்ளது. அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டம், பறிக்கப்பட்ட சரண்விடுப்பூதியம், தமதப்படுத்தி வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வு, நிறைவேற்றப்படாத தற்காலிக பணியாளர்களின் பணிநிரந்தரம், தொகுப்பூதியத்தில்

இருப்பவர்களை காலமுறை ஊதியதிற்கு மாற்றுதல், தனியார் முகமைகளின் மூலம் சொற்ப ஊதியத்தில் அரசுப்பணிகளை நிறைவேற்றும் மறைமுக தனியார்மயத்தை ஒழித்து குறைந்தபட்ச நியாயமான ஊதியங்களை உறுதிப்படுத்தும் அரசின் நேரடி நிரந்தர பணிநியமனங்கள் போன்ற நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை உறுதியான மற்றும் விடாப்பிடியான இயக்கங்களை அரசு ஊழியர்கள். முடிவெடுத்திருக்கிறார்கள். அதன் இன்னொரு துவக்கமாக 28.03.2023 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஒரு நாள் வேலை நிறுத்தத்திருக்கு அழைப்பு விடுத்திருந்தது திசை எட்டும் திரும்பிப்பார்க்கும் வகையில் நடைபெற்ற லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்ற இந்த அடையாள வேலை நிறுத்தம் அரசாங்கத்தை நிச்சயம் யோசிக்க வைத்திருக்கும் என்பது நிதர்சனமே!

●

பேட்டி

# நாங்கள் தலைகீழாகத்தான் குதிப்போம்!

## - நமது நிருபர்

தமிழ்நாட்டில் பாஜக ஆட்சிக்கு வந்தால் இந்துசமய அறநிலையத்துறையை ஒழிப்பது தான் முதல் வேலை என்று பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை சமீபத்தில் கூறியிருந்தது பொது தளத்தில் சர்சைகுரியதானது. அண்ணாமலையின் அறைவேர்கட்டுத் தனமான இந்த பேச்சை அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டித்தனர். இந்துசமய அறநிலையத்துறையை ஒழிப்பது என்ற பேச்சு, கோவில் சொத்துக் களை தனிநபர்கள் கொள்ளையடிக்கவே உதவி செய்யும் என்று கடுமையாக விமர்சித்தனர். இதுகுறித்து ஆன்மீக பேச்சாளரும் அறநிலையத்துறை ஆலோசனைக்குழு உறுப்பினருமான சுகி சிவம் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், “அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா ஆகிவிடுவார். சித்தப்பா பெண்ணை எப்படி கல்யாணம் முடிப்பது என்று ஒருவன் கேட்டால் எவ்வளவு குழந்தைத்தனமாக இருக்குமோ, அவ்வளவு குழந் தைத்தனமானது பாஜக அண்ணாமலையின் பேச்சு. பாஜக ஆட்சிக்கு வந்தால் என்று அவர் கூறுவது கற் பனையின் உச்சம்.” என்று பொரிந்து தள்ளிவிட்டார்.

“பாண்டிச்சேரி கூட்டணி அரசில் யார் இருக்கிறார்கள்? அங்குள்ள திருநள்ளாறு கோவில் யார் கட்டுப்பாட்டில் உள்ளது? முதல்வர் ரங்கசாமி கூட்டணி அரசில்தானே பாஜக உள்ளது.எனவே முதல்வர் ரங்கசாமி இந்துக்கோவில்களை இந்துக்களிடமே விட்டுக்கொடுத்து விட்டு, திருநள்ளாறு கோவில் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்று பாஜக அறிக்கை வெளியிடுங்களேன். உங்கள் லட்சியம் நிறைவேறட்டுமே. பாஜக ஆட்சி நடைபெறும் கர்நாடக மாநிலத்தில் அரசு அதிகாரிகள் கோவில் நிர்வாக அதிகாரிகளாக இருக்கிறார்களா? இல்லையா? சொல்லுங்கள். கர்நாடகா விலும் பாண்டிச்சேரியிலும் இந்து சமய அறநிலையத்துறை இருக்கிற போது, அங்கு சென்று பாஜகவினர் போராட்டம் நடத்துங்களேன். பாஜக ஆளும் மாநிலங்களில் இந்து சமய அறநிலையத்துறை இருக் கிறபோது,தமிழ்நாட்டில் மட்டும் இருக்கக்கூடாது என்று சொல்வது ஏன்?” என்றும் கேள்வி எழுப்பினார்.

இந்து சமய அறநிலையத்துறை எப்போது உண்டானது? எதனால் உண்டானது? இதனை முன்மொழிந்தவர்கள் யார் என்ற வரலாற்றை சரியாகப் படித்திருந்தால், அண்ணாமலை அப்படி பேசியிருக்க மாட்டார். கோவில்களில் அரசு தலையிடக்கூடாது என்று கொள்கை முடிவு எடுத்தால், முதலில் எழும் கேள்வி என்பது கோவில்களை யாரிடம் ஒப்படைப்பது? இந்து கோவில்களில் துணை ஆணையர், கூடுதல் ஆணையர் என்று அதிகாரிகளை நியமித்து அரசு, கோவில்களை நிர்வகித்து வருகிறது. இந்தக் கோவில்களை யாரிடம் திருப்பிக் கொடுக்கப்போகிறார்கள்? கோவில் குருக்களிடமா? சிப்பந்திகளிடமா? ஊரில் உள்ள பணக்காரர்களிடமா? கோவிலுக்கு நன்கொடை கொடுத்தவர்களைக் கொண்டு ஒரு கமிட்டி அமைத்து அவர்களிடம் கோவில்களை கொடுக்கப்போகிறார்களா? வாய்க்கு வந்தபடி பேசுவது சுலபம். ஆனால் நடைமுறையில் கோவிலை யார் நிர்வகிக்கப்போகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது. இந்துசமய அறநிலையத்துறையை கொண்டுவந்தவர் நாத்திகர் அல்ல. இன்னும் சொல்லப் போனால் நாத்திகர்கள் இயக்கம்

மீது கோபம் கொண்ட, முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்தான் இதனை கொண்டுவந்தார். இந்த தகவல் எத்தனைப் பேருக்குத் தெரியும். கோவில் சொத்துக்களை முதன் முதலில் தனியாரிடம் மாற்றிக் கொடுத்தவர்கள் ஆத்திகர்கள் தான்; நாத்திகர்கள் அல்ல. கோவிலுக்கு மற்றவர்களால் இனாமாக வழங்கப்பட்ட நிலங்களை தவறாக பயன்படுத்தியது யார் என்பதை அறிய, கடந்த 200 வருட ஆவணங்களை எடுத்துப் பாருங்கள். நிறைய வழக்குகளை படித்துப் பார்த்த பிறகு இந்த முடிவுக்கு வருகிறேன்.

கோவில் சொத்துக்களை தவறாக பயன்படுத்தியது தெரிந்து தான், அதுகுறித்து அன்றைய முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சட்டமன்றத்தில் பேசினார். அதிக தவறுகள் நடந்த பிறகு தான் கோவில் சொத்துக்களை அரசு காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உருவானது.கோவில் நிர்வாகத்தில் தவறுகள் நடந்தால் அதை சுட்டிக்காட்டி வெளிக்கொண்டு வந்து, சரி செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு, கோவில்களை தனியாரிடம் கொடுக்க வேண்டும் என்று பேசுவது முறையானது அல்ல. திருமலை நாயக்கர் கட்டிய கோவிலை யாரிடம் கொடுக்கப் போகிறீர்கள்? சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் கட்டிய கோவிலை இன்று யாரிடம் கொடுக்கப் போகிறீர்கள்? கோவிலை தனியாரிடம் கொடுங்கள் என்ற வாதமே, உணர்வை தூண்டுவதற்கான, வெறியை தூண்டுவதற்கான வார்த்தையே. இது சரியான தீர்வு அல்ல. திருவண்ணாமலை தீபத்திரு விழாவிற்கு வந்தவர்கள் 32 லட்சம் பேர். இவர்கள் வந்து செல்வதற்கான ஏற்பாடுகளை செய்தது அரசுதான். கோவில் அரசு கட்டுப்பாட்டில் உள்ளதால்தான் எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் இவ்வளவு மக்கள் வந்து செல்ல முடிகிறது. இதுவே கோவில் தனியாரிடம் இருந்தால் இதைச் செய்ய முடியுமா? எதையாவது பிரச்சனை யை கிளப்பி சண்டை போட நினைக்கிறவர்கள்தான் கோவிலை தனியாரிடம் ஒப்படையுங்கள் என்று பேசுகிறார்கள். இந்துசமய அற நிலையத்துறையின் 50 ஆண்டு கால வரலாறு தெரிந்தவர்கள் இப்படி பேசமாட்டார்கள்.'' என்கிறார் சுகி சிவம். தங்கள் கட்சி ஆட்சி செய்யும் பக்கத்துக்கு மாநிலங்களில் உள்ள நிலைமைகளைக் கூட கருத்தில் கொள்ளாமல் எதையெடுத்தாலும் எதிர்ப்பது என்ற தமிழக பாஜக தலைவர்களின் போக்கு நாங்கள் தலைகீழாகத்தான் குதிப்போம் என்பதை சொல்லாமல் சொல்வதாக உள்ளது. ●



**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் C.கல்யாண சுந்தரம் திருமண விழா நிகழ்வு.**

கவிதை

# கோடுகள்

- தணிகைச்செல்வன்

முத்தமிழ் காவியங்கள்
முழங்கிடும் இந்த நாட்டில்
எத்தனை இதிகாசப் போர்!
அத்தனைப் போர்களுக்கும்
அடிப்படைப் பொருளாய் நிற்கும்
தத்துவம் என்னவென்று
தமிழனே சிந்தித்தாயா?

வில்லவன் சேரனின் போர்;
மீனவன் பாண்டியன் போர்;
பல்லவன் - சோழனின் போர்;
பாளையம் நெடுகிலும் போர்;
வெள்ளையன் வந்தாலே
விடுதலைப் போர்கள் - என்று
எல்லைநாள் சரித்திரத்தின்
எழுதுகோல் வாளேயாகும்!

பற்றிய பூமி மீட்ட
பாரதப் போர் தொடங்கி,
முற்றிய போர் ஒவ்வொன்றின்
முகத்திரை நீக்கிப் பார்த்தால்
வெற்றியின் பின்னே, உடமை
வர்க்கத்தின் பற்கள் தெரியும்
சொத்துடை கூட்டத்துக்குச்
சுரண்டலே - கீதை பைபிள்!

வெள்ளையன் அகன்ற பின்பு
வரலாற்றின் கறை நீங்கிற்றா?
இல்லையே! நேற்றின் நீதி
இன்றைக்கும் தொடர்வதேனோ?
அந்நியச் சுரண்டலுக்கும்
இந்தியச் சுரண்டலுக்கும்
வண்ணம்தான் வேறுபாடு
வாழ்க்கையோ வறுமைக்கோடு!

இமயத்தின் கோடு தன்னில்
இலச்சினைப் பொறித்து வென்ற
சமுதாய மக்கள் இன்று
தாண்ட முடியாத கோடு
எமதன்னை நாட்டில் உண்டா?
எனப் பழம் பெருமை பேசும்
நமக்கெல்லாம் சூடு போட
வந்தது வறுமைக் கோடு

வயலிலே வரப்புக் கோடும்
வீதியில் சாதிக் கோடும்
பழமை ஜாதகத்தின் கோடும்
பசியாளர் வயிற்றுக் கோடும்
அழிகின்ற திருநாள் ஒன்றை
அழைக்கின்ற நாளிலேதான்
முழுமையாய் வெல்லும்;
புரட்சி முடிசூட்டிக் கொள்ளும் இங்கே!

# ஜாக்டோ – ஜியோ (JACTTO – GEO)

ஜாக்டோ ஜியோ

Joint Action Council of Tamilnadu Teachers Organisation and Government Employees Organisation

தொடர்பு முகவரி: நெ.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 05. போன்: 28441826 Email: jacttogeoconference@gmail.com

நாள்:

பெறுநர்,

மாண்புமிகு திரு. **எ.வ.வேலு** அவர்கள்
பொதுப் பணித்துறை அமைச்சர்
தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு,

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள் என அனைத்துத்துறை ஊழியர்களும், ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து கட்டமைத்துள்ள ஜாக்டோ ஜியோ பேரியக்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த வணக்கங்கள்.

நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் மறுக்கப்பட்ட, பறிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சலுகைகளுக்காக குரல் எழுப்பியதுடன் மட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்று ஜாக்டோ ஜியோ கூட்டங்களிலும், மாநாடுகளிலும் பேசினார்.

ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நடைபெற்ற ஜாக்டோ ஜியோ மாநாட்டிலும் "எங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நினைவில் உள்ளதாகவும் நம்பிக்கையுடன் காத்திருங்கள்" என்றும் தெரிவித்திருந்தார். ஆதனால் நாங்கள் கடந்த இருபது ஆண்டுகளாக கீழ்க்கண்ட கோரிக்கைகளுக்காக நடத்திய போராட்டங்கள் அனைத்தும் நிறைவேறிவிடும் என்றே நினைத்திருந்தோம். அந்தப் போராட்டங்களாவன.

- 1.4.2003க்குப் பிறகு அரசுப்பணியில் சேர்ந்தோருக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினைக் கைவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே அமல்படுத்திட வேண்டும்.
- 2021ஆம் ஆண்டு திமுக ஆட்சிப் பொறுப்பேற்று மூன்றுமுறை அறிவிக்கப்பட்ட அகவிலைப்படியானது ஆறு மாத காலம் கடந்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஒன்றிய அரசு அறிவித்துள்ள 4 சதவீத அகவிலைப்படி குறித்தும் தமிழ்நாட்டில் பணிசெய்யும் தமிழ்நாட்டு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப்பணியாளர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. எனவே ஒன்றிய அரசு அறிவிக்கும் அகவிலைப்படிக்கு இணையான அகவிலைப்படியினை ஒன்றிய அரசு அறிவிக்கும் தேதியிலிருந்தே நிலுவைத் தொகையுடன் வழங்கிட வேண்டும்.
- காலவரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண்விடுப்பு ஒப்படைப்பு, உயர் கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு ஆகியவற்றை உடனடியாக வழங்கிட வேண்டும்.
- இடைநிலை ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கும், முதுகலை ஆசிரியர்களுக்கும், உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் இழைக்கப்பட்டு வரும் அநீதி களையப்பட வேண்டும்.
- முதுநிலை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப்பணியாளர்கள், பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள், ஆசியோருக்கான ஊதிய முரண்பாட்டினைக் களைய வேண்டும். கல்லூரி பேராசிரியர்களுக்கான நிலுவையிலுள்ள பணிமேம்பாடு

தொடர்பு முகவரி: நெ.46, தோமத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 05. போன்: 28441828 Email: jactogeoconference@gmail.com

(CAS), ஊக்க ஊதிய உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக உயர்த்த வேண்டும்.

- சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு, அங்கன்வாடி வருவாய் கிராம உதவியாளர்கள்,ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் MRB செவிலியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும். மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஆசிரியர்கள், அதேபோல் 171 தொழிற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

- அரசின் பல்வேறு துறைகளில் 30 விழுக்காட்டிற்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

- 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசு ஊழியர்கள்–ஆசிரியர்கள்–அரசுப் பணியாளர்கள ஆகியோருக்கு மறுக்கப்பட்டுள்ளதை உடனடியாக வழங்கிட வேண்டும்.

- 2003 முதல் 2004 வரை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் பணிக் காலத்தினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன் முறைப்படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும்

- சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தினை பணிக்காலமாக வரன்முறைப்படுத்த வேண்டும்.

- உள்ளாட்சி அமைப்புகளிலும் பல்வேறு அரசுத்துறைகளிலும் தனியார் முகமை மூலம் பணியாளர்களை நியமனம் செய்வதை உடனடியாக தடை செய்திட வேண்டும்.

- அனைத்துப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியர்கள் தேர்வு வாரியத்தின் மூலம் மட்டுமே பணியமர்த்தப்பட வேண்டும்.

- 3500 அரசுத் தொடக்கப்பள்ளிகளை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுடன் இணைக்கும் முடிவினையும், 3500 சத்துணவு மையங்களை மூடுவதையும் முற்றிலுமாக கைவிட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலித்து ஒவ்வொன்றாக அனைத்தையும் நிறைவேற்றித் தருவேன் என்ற நம்பிக்கையை விளைத்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் அறிக்கையிலும் தான் சொன்னதைச் செய்வேன் என்றும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் கோரிக்கைகளை கண்டிப்பாக நிறைவேற்றுவேன் என்று உறுதிப்படுத்தியிருந்தார். அந்த நம்பிக்கையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள் அனைவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தற்போதாவது எங்களுடைய கோரிக்கைகளில் ஒரு சிலவற்றையாவது நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையில் இருந்தோம். ஆனால் ஆட்சிப் பொறுப்பேற்று தற்போது இரண்டு ஆண்டுகள் முடிவடையும் தருவாயிலும் மேற்கண்ட கோரிக்கைகளை ஒன்றைக்கூட நிறைவேற்றாமல் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளில் 86 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டதாக சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களிடையே மிகுந்த ஏமாற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மேற்கண்ட கோரிக்கைகளில் சில கோரிக்கைகளையாவது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து ஆணையிடுவார் என்ற எதிர்பார்ப்புகளும்கூட தற்போது பொய்த்துள்ளது. சட்டமன்ற கூட்டத்தொடரில் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட அறிவிப்புகளில் நாங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளில் ஒன்றைக்கூட கருத்தில் கொள்ளாமல், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்

மற்றும் அரசுப்பணியாளர்கள் அனைவரும் கடன்வாங்கி தினசரி வாழ்வை நடத்திக் கொண்டிருக்கும் நிலையில், அரசுப்பணியில் உள்ள ஊழியர்கள் வீடுகட்ட வைக்கப்பட்டிருந்த நிதிவரம்பு ரூ.40 லட்சத்திலிருந்து ரூ.50 லட்சமாக உயர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டதைத் தவிர வேறு எந்த அறிவிப்பும் இல்லை.

அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள்-அரசுப் பணியாளர்கள் கோரிக்கைகள் நியாயமானவை என்று அன்று எதிர்கட்சித் தலைவராக இருந்த நமது முதல்வரின் முன்னிலையில்தான் இன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்களை லட்சம் ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டும் போதவில்லை என்கிறார்கள் என்ற ரீதியில் சட்டமன்றத்தில் அவமதிப்புக்கு உள்ளாக்கியிருக்கிறார். 30 ஆண்டுகள் பணிமுடித்தபின் ஒரு லட்ச ரூபாய் சம்பளம் வாங்குவது அரசு ஊழியரும், ஆசிரியரும்,வாங்குவது அதிகப்படியானது என்று ஒரு அரசாங்கமே அதன் ஊழியர்கள் மீது சேற்றை வாரியிறைத்திருப்பது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

தேர்தல் அறிக்கையில் கொடுத்துள்ள வாக்குறுதிகளில் 86 சதவீத வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் அறிக்கையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அரசுப்பணியாளர்களின் கோரிக்கைகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றாதது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப்பணியாளர்கள் அனைவரையும் ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளதோடு எதிர்கால வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கிவிடுமோ என்ற அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே நாங்கள் எங்கள் நியாயமான கோரிக்கைகளை, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நினைவூட்டல் செய்து, அவர் தேர்தல் அறிக்கையில் கொடுத்த உறுதிமொழிகளை எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி புனித ஜார்ஜ் கோட்டையில் வரும் 11.04.2023 அன்று நேரடியாக முதல்வரை சந்தித்து நினைவூட்டல் செய்ய இருக்கிறோம்.

எங்களுடைய இருபது ஆண்டுகால நிலுவை கோரிக்கைகளின்பால் உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளவற்றில் முக்கியமான வாழ்வாதார கோரிக்கைகளையாவது உடனடியாக நிறைவேற்றித் தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று எங்கள் வாழ்வாதாரக் கோரிக்கைகளை நிறைவேற உதவிடுமாறு அன்பு கலந்த பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
மாநில ஒருங்கிணைப்பாளர்கள்

**நகல் :**

பெறுநர்,

மாண்புமிகு திரு. **தங்கம்தென்னரசு** அவர்கள்
தொழில்துறை அமைச்சர்
தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.

பெறுநர்,

மாண்புமிகு திரு. **அன்பில் மகேஸ் பொய்யாமொழி** அவர்கள்
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.

**08.04.2023 அன்று தலைமைச் செயலகத்தில் ஜாக்டோ- ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களுடன் அமைச்சர்கள் நடத்திய பேச்சுவார்த்தையின்போது வழங்கப்பட்ட கோரிக்கை முறையீடு**

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# மகளிர் தின கருத்தரங்கம்



திருவண்ணாமலை



திருவாரூர்



தூத்துக்குடி



நீலகிரி


மயிலாடுதுறை



நாகப்பட்டினம்



ஈரோடு



கரூர்



வட சென்னை


தென் சென்னை

Registered Postal Registration No. TN/CH/(C)/200/2021-2023 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2021-2023 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 13.04.2023



மனித சங்கிலிப் போராட்டத்தில் தலைமைச் செயலக ஊழியர்கள்



ஜாக்டோ – ஜியோ உயர்மட்டக்குழுக் கூட்டம்



தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக்குழுக் கூட்டம்



தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாநில கோரிக்கை மாநாடு



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க ஒருநாள் அடையாள வேலைநிறுத்த ஆர்ப்பாட்டம்



Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002. Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com